விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 355 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை (08.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# அரசின் ஊழல் ஒழிப்புக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு

## அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் ஜனாதிபதி அநுரவிடம் உறுதி



*(கொழும்பு)*

அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அமெரிக்க உதவி இராஜாங்க் செயலாளர் ஜனாதிபதி அநுரவிடம் உறுதி யளித்துள்ளார்.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## மாற்றத்தை ஏற்படுத்துவதே நோக்கம் பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

கடந்த 75 வருடங்களில் நாடு பயணித்த திசையை மாற்றி ஆய்வுகள், சான்று கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் நாட்டில் புதியதோர் மாற் றத்தை ஏற்படுத் 19

## மட்டுவிலில் விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கில் விபரீத முடிவெடுத்த 19 வயது இளை ஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 19

## 10ஆம் திகதி முதல் வடக்கில் கன மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

10ஆம் திகதி முதல் வட மாகாணத்தில் கன மழைக்கு வாய்ப்புள்ளது என வளிமண் டலவியல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

கிழக்குக் கடலில் 19

## அரிசிக்கு நிர்ணய விலை

### ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

ஒரு கிலோ நாடு அரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபாய் சில்லறை விலைக் கும் விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க, அரிசி விற்பனை யாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வர்த்தக, வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி வியாபாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடை பெற்ற சந்திப்பிலேயே ஜனாதி பதி இதனைத் தெரி வித்தார். 19

## திடீர் சுகவீனம்

## அல்வாய் கிழக்கில் இளம் தாய் மரணம்



(யாழ்ப்பாணம்)

திடீர் சுகவீனம் காரணமாக அல் வாய் கிழக்கில் இளம் தாய் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அல்வாய் கிழக்குப் பகுதி யைச் சேர்ந்த செல்வகுமார் நிரோஷா (வயது-32) என்ற 19

## உள்ளூராட்சித் தேர்தல்

### சட்டடமா அதிபரிடம் ஆலோசனை பெறத் தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர் தல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோ சனை பெறவுள்ளதாகத் தேர் தல்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

தற்போதைய உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர், உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை நடத்து வதற்கான திகதி நிர்ணயிக் கப்படவிருந்த போதி லும், அது பிற்போடப் 19

## யாழின் பல்வேறு பகுதிகளில் 300 பவுண் நகைகள் திருட்டு

### நீண்ட நாட்களாக தேடப்பட்ட பிரதான சந்தேக நபர் கொழும்பில் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 300 பவுண் நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் நீண்ட காலமாகத் தேடப்பட்ட பிரதான சந்தேக நபர் 19

## இந்திய மீனவர்களை விடுவிக்குக

### இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்



(இராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடு பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடு விக்குமாறு தமிழகம் 19

## வாகன இறக்குமதி தொடர்பில்

## எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை

### வாகன இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

வாகன இறக்குமதி தொடர் பில் எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை என இலங்கை வாகன இறக்கு மதியாளர்கள் சங்கத் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள் ளார்.

பல வாகன இறக்கு மதியாளர்கள் அடு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1986 இல் பிறந்த லண்டன் PR உள்ள பூர நட்சத்திரமும் 8 இல் செவ்வாயும் 79 கிரக பாவமும் உடைய மணமகனுக்கு மணப்பெண் தேவை. பெண்ணின் பெற்றோர் அல்லது உறவினர்கள் தொடர்பு கொள்ளவும். (610)

**075 022 4908**

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலிப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.
சம்பளம் : 2500 + உணவு (2715)

**077 993 8348**


## அரசின்...

மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவிச் இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, தற்போதைய அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு எந்தநேரத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும், நாட்டுக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கான நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் உதவி இராஜாங்க செயலாளர் தெரிவித்தார்.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் தொடர்பில் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டு புதிய அரசாங்கம் கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு அமெரிக்க அரசாங்கம் பாராட்டுக்களை தெரிவித்தார்.

(ம-7)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பசுபதி புனிதவதி**

திதி : அட்டமி

தோற்றம் : 04.08.1959
மறைவு : 01.12.2022

அவர்களின் திவச ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(607)

அறிவொளி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆட்சேர்த்தல்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
EPF .ETF உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் சிற்றுண்டி முற்றிலும் இலவசம்.
வயது எல்லை : 40 - 65 (2705)

**074 3303 985 / 071 4993 990**

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் 400m தூரத்தில் பிரதான வீதியில் இருந்து 50m தூரத்தில் இரண்டாவது காணியாக உள்ள 20 பரப்பு 6 குளி அளவுடைய மேட்டுக்காணி உடன் விற்பனைக்குள்ளது.

**1 பரப்பின் விலை - 13 லட்சம்**




(608)

வீடு கட்டுவதற்கு உகந்த மேட்டுக்காணி 4 துண்டுகளாகப் பிரித்தும் வழங்கப்படும்

**077 4366 704 / 075 1640 104**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 20.11.2023
திங்கட்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்
கலாபூஷணம்
**இராசையா பீதாம்பரம்**
**(பற்குணம்)**

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ - வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை - பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(2713)

"சாயி போட்டோ"
1010/11, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
06 . 02 . 1959

விண்ணில்
08 . 12 . 2020

அமரர்
திருமதி **லின்ரா சந்திரலிங்கம்** (பெற்றி)

அன்பின் திருவுருவே எங்கள் அம்மாவே
எமைப் பத்து மாதம் சுமந்து பாரினிலே
சீருடன் வாழ வழி காட்டிய அன்னையே
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சாயீசன் பதமடைந்து ஆண்டுகள் நான்கு
ஆனதுவோ அம்மா!
எத்தனை எத்தனை ஆண்டுகளானாலும்
என்றும் எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்
எம் அன்னைக்கு எமது இதய அஞ்சலிகள்

(909)

...துறை வீதி,
கட்டப்பிராய்.

077 019 2904

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் ஆதரவு

## வலியுறுத்திய அமெரிக்கா



(கொழும்பு)

**ஜனநாயக ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத் தின் உதவிச் செயலாளர் டொனால்ட் லு தலைமையி லான தூதுக் குழுவினருக்கும் இலங்கையில் சிவில் சமூக செயற்பாட்டாளர் களுக்கும் இடையிலான சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தமது எக்ஸ் பக்கத்தில் பதி விட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் இணையவழி பாதுகாப்பு சட்டம் உள்ளிட்டவை தொடர்பில் சிவில் சமூக செயற் பாட்டாளர்கள் தங்களது கவ லையை வெளிப்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஊழலுக்கு எதிராக அதிக பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத்தன் மைக்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கை மக்களின் குரல் களைப் பிரதிபலிக்கும் செயற் பாடுகளுக்கு அமெரிக்கா ஒத்து ழைப்பு வழங்கும் எனவும் அவர் தமது பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத் தின் உதவிச் செயலாளர் டொனால்ட் லு தலைமையி லான தூதுக் குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையி லான சந்திப்பு நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர் பில் இதன்போது கவனம் செலுத் தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை க்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவ காரப் பணியகத்தின் உதவிச் செயலாளர் டொனால்ட் லு தலை மையிலான தூதுக் குழுவினர், முன்னதாக, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிநாட்டலுவல் கள் அமைச்சர் விஜித ஹேரத், சபாநாயகர் அசோக ரங்வல உள்ளிட்ட தரப்பினரைச் சந் தித்து கலந்துரையாடியுள் ளனர். (நி-8)

# இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி



(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 20,000 மெற்றிக் தொன் வெங்காயத்தை இறக்கு மதி செய்வதற்கு நிறுவ னங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள் ளன.

கடந்த காலங்களில் நாட் டில் நிலவிய மழை காரண மாக ஏற்பட்ட வெள்ளத்தி னால் மன்னார், அம்பாந் தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் பாரிய ளவு வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வெங்காயத்துக் குத் தட்டுப்பாடு ஏற்படு வதைத் தடுக்கும் நோக் கில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

# குறைக்கப்படாத மின் கட்டணம்

## சாடும் பல்வேறு தரப்புகள்

(கொழும்பு)

மின்சார கட்டணத்தை குறைக்காமல் தற்போதுள்ள கட்டணத்தை அடுத்த 6 மாதங் களுக்கும் பேண வேண்டும் என இலங்கை மின்சார சபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவிற்கு அறிவித்துள்ள நிலையில் பல்வேறு தரப்புக ளில் இருந்தும் குற்றச்சாட் டுக்கள் எழுந்துள்ளன.

ஒக்டோபர் மாத இறுதியில் முன்வைக்கப்படும் திருத்தத் தின் மூலம் மின்சாரக் கட்டண த்தை 6 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை மின் சார சபை அறிவித்திருந்தும் ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் மின்சாரக் கட்ட ணத்தை குறைக்க முடியாது என மின்சார சபை தெரிவித் துள்ளமை சர்ச்சையைக் கிளப் பியுள்ளது.

மின்சார கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காக குறைக்க முடியும் என தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க ஜனாதிபதித் தேர்த லின் போது மிகத் தெளிவாக தெரிவித்திருந்த பின்னணி யில் மின் கட்டணத்தை திரு த்த வேண்டாம் என இலங்கை மின்சார சபை தீர்மானித்துள் ளது.

அத்துடன் 2024 செப்ரெம் பர் மாதத்திற்குள் மின்சார சபையின் நிகர லாபம் 136 பில்லியனைத் தாண்டியுள்ள பின்னணியிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளமை மேலும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள் ளது.

இதேவேளை கடந்த பல வாரங்களாக நீர்மின் நிலை யங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவ தால் தினசரி நீர் மின் உற்பத்தி 5500 மெகாவாட் மணி நேரத்தை தாண்டியுள்ள துடன் எரிபொருள் அடிப்படை யிலான மின்சார உற்பத்தி 1.3 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இதன்படி மின்சார சபை 200 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான இலாபத்தை ஈட்டி யிருப்பதால் மின்சாரக் கட்ட ணத்தை உடனடியாகக் குறைக்குமாறு கோரி சமகி கூட்டுத் தொழிற்சங்கமும் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்துள்ளதாகக் கூறப்படுகி றது. (நி-8)

# தைக்கப்பட்ட சீருடைகளை வழங்கத் தீர்மானம்



(கொழும்பு)

பாடசாலை மாணவர் களுக்கு தைக்கப்பட்ட சீரு டைகளை வழங்க அரசாங் கம் எதிர்பார்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவு அபிவிரு த்தி அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடை பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

பாடசாலை சீருடைக் கான துணிகளை வழங்கும் போது அதில் பெருமள விலான துணிகள் வீணடிக் கப்படுவதாகவும் இதனால் அடுத்த வருடம் முதல் மாணவர்களுக்கு தைக்கப் பட்ட சீருடைகளை வழங் கும் தீர்மான த்தை மேற் கொள்ளவுள்ளதா கவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார். (நி-8)

# தேசியத்தை இனவாதம் என சித்தரிப்பது தவறானது-திலித்

(கொழும்பு)

தேசியத்தை இனவாதம் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. தேசியத்தை சிற ந்த முறையில் அடையாளப் படுத்திக் கொண்டு அதற்கமைய செயற்படாவிடின் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னே ற்றமடைய முடியாது.

நாட்டு மக்களுக்கு வழங் கிய வாக்குறுதிகளை அரசாங் கம் நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் கோட்டாபய ராஜ பக்ஷவின் நிலையே ஏற்படும் என சர்வஜன சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப் பினர் திலித் ஜயவீர தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக் கறிக்கை மீதான விவா தத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் உரையாற் றியதாவது,

தேசியத்தை முன்னிலைப் படுத்தி செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபட்டோம். எம க்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரி வித்துக் கொள்வதுடன், தேசி யத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கொள்கைப் பிரகடனத்தில் சிறந்த திட்டங்கள் குறிப்பிடப்பட் டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி 75 ஆண்டுகால அரசியலை சாபம் என்று விமர்சித்தது. பல வாக் குறுதிகளை வழங்கியுள்ள துடன், பல பொய்களையும் குறிப்பிட்டுள்ளது என்பதையும் வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும்.

வழங்கிய வாக்குறுதி களை முறையாக நிறை வேற்ற வேண்டும் இல்லை யேல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படும்.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தில் முறையான கோட் பாடு மற்றும் இலக்கு குறிப் பிடப்படவில்லை. சிறந்த திட் டங்கள் ஏதும் இல்லாவிடின் கடந்த காலங்களை போன்றே இந்த கொள்கைப் பிரகடனமும் பாரம்பரியமானதாகவே கருதப் படும்.

இனவாதத்தை முழுமை யாக இல்லாதொழிப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இனவாதத்துக்கு எதிராகவே நாங்கள் செயற்படுகிறோம். தேசியத்தை முன்னிலைப் படுத்தி செயற்படுபவர்களை இனவாதிகள் என்று சித்தரிக்க கூடாது.

தேசியத்தை முன்னிலைப் படுத்தி செயற்பட்டதால் தான் அமெரிக்கர்கள் டொனால்ட் ட்ரம்பை மீண்டும் ஜனாதிபதி யாகத் தெரிவு செய்துள்ளார்கள் என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
1948 - 02 - 21

இறப்பு
2024 - 12 - 07

## சாந்தலிங்கம் கனகரெட்ணம் (உரிமையாளர் யாழ்.கூல்பார்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஒடைலேனை வசிப்பிடமாகவும் தற்போது 166, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் கனகரெட்ணம் (உரிமையாளர் - யாழ்.கூல்பார்) அவர்கள் நேற்று (07.12.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் - திருமலர்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம்-யோகதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவிகாராணி அவர்களின் பாசமிகு கணவரும் வாசுகி, சுமங்கலி, ஸ்ரீராம், சந்திரிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளிதரன், கருணாநந்தன், ஆதனா, ருஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகா, நிவேதா, விதுஷா, நிதுஷன், அப்ஷான், அல்தா, சஸ்னா, தனிஷ், தசானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (166, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

166,நாவலர்வீதி,
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம்.

(2722)

தகவல் :குடும்பத்தினர்.
077 3144 510, 077 3604 328

# மரண அறிவித்தல்



பிறப்பு
15 - 10 - 1943

இறப்பு
07 - 12 - 2024

## திருமதி மனோன்மணி கனகநாயகம்

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி கனகநாயகம் அவர்கள் நேற்று (07.12.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலர் - சாந்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் கனகநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் பார்த்தீபன்(சிங்கப்பூர்), காண்டீபன் (லண்டன்), ஜெயதீபன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசொருபி, சாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் மகிழினியின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் சிதம்பரப்பிள்ளை (கொழும்பு), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் திருமதி ந.மகேஸ்வரி, காலஞ்சென்ற சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(C-1744)

தகவல்:
குடும்பத்தினர்
074 1408157

# கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் இன்று





வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன் இறுதியாட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

40 வயதிற்கு மேற்பட்ட கால்பந்தாட்ட போட்டியின் தலைவர் கே.உதயசங்கர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக சிட்னி அவுஸ்திரேலியா TFNSW கொமேர்சஸ் முகாமையாளர் ரி.சிவசக்தி, சிறப்பு விருந்தினராக இலங்கை ரெலிகொம் பொது முகாமையாளர் எஸ்.நவநீதன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் ரி.செல்வகுமார், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் எஸ். செல்வ முரளி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(நி-8-90)

# ஜனாஸா அறிவித்தல்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அல்ஹாஜ் என்.எம்.அமீன் அவர்களின் அருமைத் தாயாரும், ஆயுர்வேத வைத்தியர் மர்ஹூம் நிஸாமுடீன் உடையார் அவர்களின் மனைவியுமான ஹாஜியானி மர்யம் பீவி அவர்கள் வபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அன்னாரின் ஜனாஸா இன்று ளுஹர் தொழுகையுடன் மாவனெல்ல, அரநாயக்க தல்கஸ்பிட்டிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும். அன்னாரின் மறுமை வாழ்வு ஈடேற்றம் பெற அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

கலாபூஷணம் பரீட் இக்பால் - யாழ்ப்பாணம்.

(c-1740)


# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306

(2720)


8 ஆம் ஆண்டு நினைவுகளில்...

அமரர் நர்கலிங்கம் புவனேந்திரன்



தோற்றம்
25 - 02 - 1950

மறைவு
07 - 12 - 2016

திதி : பூர்வபக்க அட்டமி

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய் உயர்ந்து
ஆலமர விருட்சமாய் நிழல் தந்து
பாசமுடன் எமையெல்லாம் வளர்த்து
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்துவிட்டு
எமையெல்லாம் பரிதவிக்கவிட்டு
எங்கு சென்றீர் எட்டாண்டு
கடந்து சென்றதப்பா நீர் சென்று
ஆறுமோ எம் துயர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.

(611)

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51 ஆவது கட்டளைத் தளபதி அரசாங்க அதிபர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் நிஷாந்த முத்துமால நேற்று யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (நி-8-33)



## அளவீட்டு அலகுகள் திணைக்களத்தால் கிளிநொச்சியில் சோதனை நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் ஸ்கந்தபுரம்,அக்கராயன், வட்டக்கச்சி, பரந்தன் மற்றும் கிளிநொச்சி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள்.அரிசி ஆலைகள், எரிபொருள் நிரப்பு நிலையம், மீன்சந்தை, பழக்கடைகள் மற்றும் தேங்காய் மொத்த விற்பனை நிலையம்,கோப்சிற்றி நகைக்கடைகள், பல்பொருள் அங்காடிகள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

5,6 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையின் ஊடாக உரிய காலத்தில் முத்திரையிடப்படாத மற்றும் அரச அனுமதியற்ற தராசுகள் அளவீட்டு அலகுகள் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன. (நி-8)





அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சித்திரம், பதாதை மற்றும் கார்டூன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாவட்ட வெற்றியாளர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தர்சினி தலைமையில் நேற்று முன்தினம்.யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(படம்- சிவசாந்தன்)

## நயினாதீவு வைத்தியசாலைக்கு ஸ்கானிங் இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேச வைத்தியசாலைக்கு புதிய அல்ட்ரா சவுண்ட் ஸ்கானிங் இயந்திரம் நேற்றைய தினம் நன்கொடையாளர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். (நி-8-33)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 முதல் 13 வரை

## யாழில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் மழைக்குப் பின்னரான சூழலில் டெங்குப் பரவலே மிக அதிகமாக காணப்படுகிறது.

அதனால் மாநகர சபை ஆணையாளர் நகர மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பொருத்தமான பொறிமுறையூடாக நுளம்பு பெருகாது தடுப்பதற்கான வேலை திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக காணிகளில் காணப்படும் வெற்றுக்கலன்களை சேகரித்து உரிய வகையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை சகல பிரதேச செயலாளர்களும் முன்னெடுக்க வேண்டும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இச்செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தி அதன் முன்னேற்ற அறிக்கையினை எதிர்வரும் 16 ஆம் திகதி அனுப்பி வைக்குமாறும் பிரதேச செயலர்களை மாவட்ட செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-8-33)

# வவுனியாவில் இடம்பெற்ற பண்பாட்டு பெருவிழா




(வவுனியா)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும், மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. தினேஷ் குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா அரசாங்க, அதிபர் பி. ஏ. சரத் சந்திர பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பல கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்ததோடு வவுனியம் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. (6-8)

# சந்தைக்கு அரிசி விநியோகம் உற்பத்தியாளர்கள் இணக்கம்

(கொழும்பு)

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பது குறித்து பிரதான மற்றும் நடுத்தர அரிசி ஆலை உற்பத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், 'சந்தைக்கு அரிசி விநியோகிக்க பிரதான அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதற்கமைய நாளாந்தம் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகிறது.

சந்தைக்கு அரிசியை விநியோகிக்காத அரிசிஆலை உற்பத்தியாளர்களுக்கு இனி கடன் வழங்கப்படமாட்டாது.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சியினர் மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிடுகின்றனர். கடன் மறுசீரமைப்பு தொடர் பில் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலுக்கு பின்னரும் நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது' என தெரிவித்தார். (நி-8)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(5595)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
WESTERN UNION WU MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# கலை விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 40 ஆவது கலை விழாவும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 14 ஆவது கலை விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொற்பதி அறிவாலய சரஸ்வதி முன்பள்ளி தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மாநகர சபை உறுப்பினர் எஸ்.குலேந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக விசேட கல்வி, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார், யாழ்.துளசி பான்சி சமூக சேவையாளர், எஸ்.ஜெகதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக கொக்குவில் மத்தி கிழக்கு J/126 கிராம சேவை உத்தியோகத்தர் செல்வி வே.சுகிர்தினி, கோணாவளை பிரதேச குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி.ச.சர்மிளா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

மணமகன் தேவை
1996, இந்து, பூரம், DOCTOR
பூர்வீகம் – கிளிநொச்சி, வதியுமிடம் – வவுனியா
மணமகள் பதிவு இல: 11252.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-2505)
www.EQMarriageService.com

மணமகள் தேவை
1999, இந்து, சதயம், MANAGER
பூர்வீகம் – யாழ்ப்பாணம், வதியுமிடம் – FRANCE
மணமகன் பதிவு இல: 11260.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-2505)
www.EQMarriageService.com

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
08 மார்கழி 2024
"வன்மையாகத் தாக்குவது மட்டுமே வன்முறை இல்லை. உங்கள் எதிர்ப்பாலினத்தை கடுமையான சொற்களால் பேசுவதும் வன்முறையே!"
JSAC
16
2024
(சி-1738)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# இராசிபலன்

08.12. 2024
கார்த்திகை 23, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி காலை 8.02மணிவரை

அட்டமி பின்னிரவு 5.56 மணிவரை
சதயம் பிற்பகல் 2.42 மணிவரை
சுபநேரம் 9.17-10.47 மணிவரை

இராகுகாலம் -4.47-6.17 மணிவரை
சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சென்ற இடமெல்லாம் சிறப்புக்கள் வந்து சேரலாம், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, ரோக பயமுண்டு.

**கன்னி** கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், எதிரிகள் உதிரியாகும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்** உறவினர் சிலரின் சந்திப்பால் மகிழ்ச்சியுண்டு, எடுத்த காரியங்களில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தேவையற்ற மனஸ்தாபங்களைத் தவிர்ப்பது நல்லது.

குறுக்கு வழியில் சம்பாதிக்கும் பணமானது எதிர்பாராத செலவுகளில் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 470
Viber 076 636 3378



# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர வழிசமைப்பது யார்!

**எமது நிலத்தில் படையினர் விவசாயம் செய்கின்றனர். எமது வளங்களை அள்ளிச் செல்கின்றனர் எனப் போர் கொடி தூக்கும் தமிழ் தேசியவாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.**



எமது நிலம் எமக்கு வேண்டும். படையினரே எமது நிலத்தில் இருந்து வெளியேறு. நாம் எமது சொந்த நிலங்களில் நிம்மதியாக வாழ வேண்டும். இவ்வாறான கோசங்கள் இற்றைக்கு இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக கேட்டு காது புளித்து விட்டது.

ஆயினும் இன்றுவரை அந்த கோசங்கள் ஓய்வதாகத் தெரியவில்லை. இது ஒரு புறமிருக்க படையினரால் விடுவிக்கப்படும் பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் என்பது ஆங்காங்கே நடைபெறுவதாயினும் அதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்பது தான் மெய்.

விடுவிக்கப்பட்ட தமது காணிகளைப் பார்வையிடுவதுடன் அவர்களின் பணி முடிந்து விட்டதாகக் கருதுகின்றனர் போலும்.

இதைவிட விடுவிக்கப்பட்ட அநேக காணிகள் துப்பரவு செய்யாமல் பற்றை மண்டிக் கிடப்பது வேதனைக்குரியது.

வெளிநாட்டில் இருப்பவர்களின் காணிகளே இதில் அதிகம் எனலாம். புலம்பெயர் ஈழத்தமிழர்கள் எமது சொந்த நிலத்தில் நாம் கால் வைக்க முடியவில்லை என்று கண்ணீர் மல்கக் கூறிக் கொண்டாலும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது காணிகளைத் துப்பரவு செய்து அங்கு ஏனைய மக்கள் குடியேற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எம்மவர்களும் விடுவிக்கப்பட்ட பகுதியைப் பார்வையிடுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அங்கு மீளக்குடியமர முற்பட வேண்டும்.

இல்லையேல் மக்கள் மீளக் குடியமராத பகுதிகளை மீள ஆக்கிரமிக்க நாமே ஒத்தாசை புரிவதாய் அமைந்து விடும்.

அண்மைக்காலமாக வலி வடக்குப் பகுதிகளில் பாரியளவு மக்களின் காணிகள் படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தது.

அநுர அரசு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய விடயங்களில் காணி விடுவிப்பும் ஒன்றாக இருந்த நிலையில் தற்போது கட்டம் கட்டமாக படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளை விடுவித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால் அரசாங்கத்தின் காணி விடுவிப்பு வேகத்தில் அரைப்பங்கேனும் மக்கள் மீளக்குடியமரும் வேகம் இல்லை என்பது தான் வேதனை.

வலி வடக்கு பூமி செல்வம் கொளிக்கும் பூமி. வெற்றிலை, திராட்சை என்பவற்றிற்கு பெயர் போன பூமி.

காங்கேசன்துறை வெற்றிலை, திராட்சை என்றால் திறம் என்றும் தனி ருசி என்றும் மக்கள் மத்தியில் பரவலான எண்ணப்பாடு இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கும்வரை எமது காணிகளை விடுவிக்க வேண்டும் எனக்கோசம் போட்ட நாம், படையினர் அவற்றை விடுவித்த பின்னர் அங்கு மீளக்குடியமராமலும் விவசாய முயற்சிகளை மேற்கொள்ளாமலும் இருப்பது ஒரு நாளும் பிரச்சினையைத் தீராது.

எமது நிலம் எமக்கானது. அதை இழப்போமாக இருந்தால் எமது பூர்விகம் பறிபோகும் அதன் பின்னர் நாம் எவ்வாறு கத்திக் குளறினாலும் பயன் ஏதும் ஆகாது.

ஈழத்தமிழரிடம் இருக்கும் பாரிய பிரச்சினை என்னவென்றால் மீளக்குடியமரவோ, புதிய குடியேற்றங்களையோ விரும்புவதில்லை.

குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல தந்தையின் காணியை இரண்டாகப் பிரிப்பது, நான்காகப் பிரிப்பது, ஆறாகப் பிரிப்பது என்ற பிரிவுகள் ஏற்படுத்தப்படுமேயன்றி புதிய குடியேற்றங்களினூடாக தமிழ் குடிப்பரம்பலை தொலைவாக்கி எமது இனப்பரம்பலை அதிகரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

பெரும்பான்மையினரிடம் இது நிறையவே இருக்கிறது. புதிய குடியேற்றங்களை தமது இனப்பரம்பல் சார்ந்து சிந்திக்கும் எண்ணப்பாங்கு அவர்களிடம் அதிகம்.

இங்கு அதிகம் சிந்திக்க வேண்டியவர்கள் புலம்பெயர் உறவுகளே. உங்களின் நிலம் உங்களுக்கு வேண்டும் என்று கோசம் போடத் தெரிந்த உங்களுக்கு அவற்றை துப்பரவு செய்து அதில் வருமானத்தைத் தரக்கூடிய ஒரு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க நீங்கள் முன்வராதது ஏன்?

எமது நிலத்தில் படையினர் விவசாயம் செய்கின்றனர். எமது வளங்களை அள்ளிச் செல்கின்றனர் என போர் கொடி தூக்கும் தமிழ் தேசியவாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

விடுவித்த இடங்களில் மீள்குடியமரவோ, விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கவோ செய்யாமல் அவற்றை பற்றை மண்டிக் கிடக்க விட்டு விட்டு படையினர் மீது குறை கூறி அரசியல் செய்வதை நிறுத்துங்கள்.

மக்கள் மீளக்குடியேற முயற்சி செய்யுங்கள். காணிகள் விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளையும் தெரிவு செய்து கள விஜயம் செல்லுங்கள். எமது நிலத்தின் முக்கியத்துவத்தையும் அதை இழக்கும் அபாயத்தையும் அவர்களுக்கு எடுத்தியம்புங்கள்.

அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுங்கள். மக்கள் மீளக்குடியமர்வுக்கான பணிகளைச் செய்ய அரசிற்கு அழுத்தம் கொடுங்கள்.

இதுவே இன்றைய காலத்தின் தேவை. இதை விட்டு விட்டு விகாரைகளுக்கு எதிராக போர்க் கொடி தூக்குவதும் எமது நிலத்தின் வளங்கள் தெற்கிற்கு பணமாகச் செல்கிறது என்று அறிக்கை விடுவதையும் நிறுத்துங்கள்.

இதுவே இன்றைய காலத்தின் தேவை. இல்லையேல் எமது நிலம் பறிபோகும் அபாயம் இருக்கவே செய்யும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் காண்பதறிவு



ஒருநாள் காட்டு வழியில் சென்றுகொண்டிருந்தார் தத்தாத்ரேயர். அருகிலிருக்கும் ஊருக்குச் செல்லும் வழி தெரியவில்லை. ஓரிடத்தில் வேடன் ஒருவனைப் பார்த்தார். அவன் வில்லில் நாணேற்றி மரத்தில் அமர்ந்திருந்த ஒரு பறவையைக் குறிபார்த்துக்கொண்டிருந்தான். அவனிடம் "ஐயா பக்கத்திலிருக்கும் ஊருக்கு எப்படிச் செல்வது?" என்று கேட்டார். அவன், அவரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவர், திரும்பத் திரும்பக் கேட்டார். அவனுக்குக் காதில் விழவேயில்லை.

ஒரு கணத்தில் அம்பை எய்தான். பறவை வீழ்ந்தது. திரும்பியவன், அருகே கைகளைக் கூப்பியபடி தத்தாத்ரேயர் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான். பதறிப்போனான். சுவாமி என்னை ஏன் வணங்குகிறீர்கள்?" என்றான். ஐயா, எனக்குச் சிறந்த பாடம் கற்றுக்கொடுத்தீர்கள்.

அந்தப் பறவையை வீழ்த்தும் வரை வேறு எதிலும் உங்கள் கவனம் திரும்பவில்லை. அதேபோல இறை சிந்தனையில் இருக்கும்போது வேறு எந்த சிந்தனையும் கூடாது என்ற பாடத்தை இன்று தங்களிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்றார் தத்தாத்ரேயர். பிறகு, வேடன் அருகிலிருக்கும் ஊருக்கு வழி சொல்ல திரும்பி நடந்தார்.

'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்கிறார் வள்ளுவர். அதாவது, யார், எதைச் சொன்னாலும் அது உண்மைதானா என்பதை ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டும்.' சிலருக்கோ உண்மையை எடுத்துச் சொன்னாலும்கூட மண்டையில் ஏறாது.

ஓர் அரசன், பூனை ஒன்றை வளர்த்து வந்தான். இரவில் மேசைமீது பூனையை அமர்த்தி அதன் தலையில் விளக்கு ஒன்றை வைத்து விடுவான். பூனை ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும். விளக்கு வெளிச்சத்தில் ஓலைச்சுவடிகளைப் படிப்பான் அரசு ஆவணங்களில் கையெழுத்திடுவான் அரசன். அவனுக்குப் பூனைமேல் அளவிட முடியாத பெருமை. என் பூனைக்கு விசுவாசம் அதிகம் என்று அடிக்கடி சொல்வான். அவனுடைய மந்திரிக்கு அதில் உடன்பாடு இல்லை. அரசே நாய்களுக்குக்கூட நன்றி உண்டு, பூனைகளுக்குக் கிடையவே கிடையாது என்பார். அரசன் அதைக் கேட்பதாக இல்லை. அரசனுக்கு உண்மையைப் புரியவைக்க வேண்டும் என்று முடிவு செய்தார் மந்திரி.

ஒருநாள் இரவு. வழக்கம்போல அரசன், பூனையின் தலையில் விளக்கை வைத்துவிட்டு வேலையில் ஆழ்ந்துபோயிருந்தான். மந்திரி அறைக்குள் நுழைந்தார். தன் கையிலிருந்த சிறு சாக்குப்பையை லேசாகப் பிரித்துக் காட்டினார். அதற்குள் நான்கைந்து எலிகள் இருந்தன. அவ்வளவுதான்... பூனை விளக்கைப் போட்டுவிட்டு, அந்தப் பையை நோக்கிப் பாய்ந்தது!

# வாழ்வை வாழ்ந்து முடிப்போம்!

இல் வாழ்க்கை எனப்படும் குடும்ப வாழ்வியல் ஒவ்வொரு மனித னுக்கும் மிக முக்கியமானது. குடும்பம் என்னும் அமைப்பானது மனிதத்தை உருவாக்கின்ற. உயிர்ப்பிக்கின்ற சிறப்பான தளமாகும். இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் என காலங்காலமாக நாம் குறிப்பிடுகின்ற திருக்குறள் இல்வாழ்க்கை பற்றி மிக அழகாகச் சொல்கிறது.

உண்மையில் எங்களுடைய பண்பாட்டின் விருட்சமாக விழுதெறிந்த குடும்ப வாழ்வியல் இன்று அறநெறிகளில் நின்று விலகி நச்சரிப்பும் பற்கடிப்புகளும் நிறைந்து எந்த வேளையிலும் பிரிந்து செல்லலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் பக்தியானது குடும்பங்களில் அன்பாக அரவ ணைப்பாக, புரிதலாக, விட்டுக்கொடுப்பாக, ஒருவரை ஒருவர் தாங்கும் நிலையாக வியாபித்திருந்தது. தலைவன் தலைவி அன்பில் அறமாக விளைந்தது மழலைச் செவல்வம்.

இதற்கு மேலாக கூட்டுக் குடும்ப வாழ்வியல் தவறுகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டும் நீதிமன்றமாகச் செயற்பட்டது கிழவன் கிழத்தி என்கிற குடும்ப மணிமகுடம் இதுவே.நியாயம் தீர்க்கும் சிம்மாசனத்தில் உல்லாசம் கொண்டதை இலக்கியங்கள் இயம்பி நிற்கின்றன. ஒரு குடையின் கீழ் குடும்ப உறவுகளின் அன்பும் அரவணைப்பும் மட்டுமல்ல கண்டிப்பும் கூட வாரிசுகளைச் செதுக்கிச் செப்பனிட்டன. குடும்பப் பிரிவினைகளை விரல் விட்டே எண்ண முடிந்தது.

இன்று நடப்பதென்ன? நிலவைக் காட்ட, நியாயம் தீர்க்க, குழந்தைக ளுக்கு உணவூட்ட முதியோர் இல்லை. முதியோர் இல்லங்களில் அவர்கள் தஞ்சம். "நான்" என்கிற ஆணவமும் நீ என்கிற பிரிவினையும் மனங்களை ஆட்சி செய்ய, வக்கிர மனத்தோடு ஆணாதிக்க சிந்தை பெண்மையை அரவணைக்க இல்லறம் தோற்றுப் போகிறது. பெற்றோரின் சண்டைகளுக்கிடையே தத்தளிக்கும் குழந்தைகள் வன்முறையாளர்களாக உருவாகினர். விட்டுக் கொடுப்பே இல்லாத குடும்பங்கள் பழிதீர்க்கும் மனங்களைச் சுமக்கின்றன.

திருமணத்தின் பின் பிறந்த வீட்டு உறவுகளுக்காகச் சண்டையிடும் ஆண்களும்.பிரிந்து செல்லும் ஆண்களின் பின்னே செல்லும் பெண்களும் தங்கள் குழந்தைகளை. அவர்கள் நலனை நோக்க மறந்து விடுகின்றனர். கடந்து செல்லும் ஒவ்வொரு நிமிடமும் மணித்தியாலமாக வாழ்க்கையைக் காவு கொண்டு விடும்.

குடும்பங்கள் குதூகலிக்க வேண்டும். கணவன் மனைவியிடம் தோற்றுப் போக வேண்டும். மனைவி கணவரிடம் தோற்க வேண்டும். தோல்வியே ஊடலையும் விரைவாகக் கூடலையும் பரிசளிக்கும். பெற்று வளர்த்த வர்கள் பத்து மாதம் சுமந்து தோள் தாங்கி பிள்ளைகளை வளர்த்து கல்வி புகட்டி ஆளாக்கி ஒரு கட்டத்தில் வாழ்க்கைத் துணையைத் தேடி ஒப்படைக்கின்றனர். இங்கு பெற்றோரின் ஆரோக்கியம் மெல்ல மறைய இளமை போய் முதுமை அரவணைக்கிறது. இக் கட்டத்தில் வாழ்நாள் துணையாகவும், குலம் தழைக்கவும், இன்னொரு குடும்பத்தை உருவாக்கவும் வாழ்வியலின் முழுமைத்துவத்தை அனுபவிக்கவும் கணவன் மனைவி என்ற புதிய, புதுமையான உறவை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

இந்த இடத்தில் ஆணும் பெண்ணும் பொறுப்பு மிக்க பெறுமதி மிக்க மனிதர்களாகத் தோற்றம் பெறுகின்றனர். அவர்களின் மகிழ்வில் மழலைகள் உருவாகுகிறார்கள்? யார் செய்த பாவம்? இன்று பல பெண்களின் கண்ணீர்க் கதைகளை எம் சமூகம் சுமக்க முடியாமல் சுமக்கிறது. ஒரு குழந்தையோடு மணமுறிவு. நோயின் ஆக்கிரமிப்பு வறுமை, புரிதலின்மை போன்றன குடும்ப வாழ்வியலை புரட்டிப் போடுகின்றன. எத்தனை குழந்தைகள் தந்தையின் முகம் காணாது வளர்கிறார்கள்?மழலைப் பேச்சை கேட்காது ஒதுங்கும் அப்பாக்கள் எத்தனை பேர்? குடும்பம் என்ற அமைப்பின் பொறுப்பில் இருந்து விலகி வெட்டியாக வாழும் ஆண்கள் எத்தனை பேர்? தலைவன் நானே, புருசன் நானே அப்பா நானே என மார் தட்டும் ஆணாதிக்கம் தான் எத்தனை?கணவனைத் தேடி அலையும் பெண்கள் எத்தனை பேர்? அப்பா யார்? என்ற குழந்தையின் கேள்விக்கு பதில் தேடும் தாய்மை தான் எத்தனை? தந்தை எங்கோ இருக்க பொதி சுமக்கும் கழுதையாக குடும்பத்தைச் சுமக்கும் பெண்கள் எத்தனை பேர்?ஆக இந்த நிமிடம் உனக்கானது. வாழ்ந்து கொள். வாழ்வின் இறுதி நாள் இன்றாகக் கூட இருக்காலாம் அல்லவா?

"அறத் தாந்தின் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை" என்ற வள்ளுவத்தின்படி இல்வாழ்வின் திறனறிந்து வாழ்ந்து ஒழுகுபவன் முயற்சியாளர் யாவரிலும் சிறந்தவன் என்பதை கருத்திற் கொண்டவர்களாய் வாழ்வதே இல் வாழ்வின் உன்னதம் மட்டுமல்ல, ஐயன் வள்ளுவனுக்கும் நாம் செய்யும் நன்றிக் கடனும் கூட. பிறந்த ஒரு குழந்தை பெற்றோரால் வாழ்வியல் துன்பங்களைச் சுமப்பதா? பெற்றோரே சிந்தியுங்கள்.



உடுவிலூர் கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி , நாவற்குழிப் பாலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மின்விளக்குகள் ஒளிர்வதற்கு IMF இடம் கடன் --பெற வேண்டுமா வியாசரே?

**ரதீஸ் மல்வம்**

**தத்துவம் ஒன்று கூறுங்களேன்?**

மனைவி மூலம் நல்ல அதிஷ்டம் கிடைக்கும் சிலருக்கு... அதிஷ்டம் இருந்தால்தான் நல்ல மனைவியே கிடைக்கும் பலருக்கு.

**தருஷ் வதிரி**

**இந்த உலகத்தில் பண விடயத்தில் நேர்மையானவர்கள் யாரும் இருக்கிறார்களா வியாசரே?**

ஏ.ரி.எம் மெசின் இருக்கிறதே. ஆம், உலகில் பண விடயத்தில் மிகவும் நேர்மையாகச் செயற்படும் ஒரே ஒருவர் ஏ.ரி.எம் மெசின் மட்டுமே.

எவ்வளவு கஷ்டம் என்றாலும் என்ன அவசரம் என்றாலும் நிதானமாயும் நேர்மையாயும் செயற்படும் ஒரே ஒருவர் ஏ.ரி.எம் தான்.

யாருக்காவது ஒரு நோட்டையாவது அதிகமாகக் கொடுத்திருப்பதாக வரலாறு உண்டா?

**ஜெயக்குமார் முகமாலை**

**எதைச் செய்தாலும் கடவுளுக்கு என்று செய்யாமல் மனிதர்களுக்கு என்று செய்யுங்கள் என்பது தொடர்பில்...?**

முதலாளி ஒருவன் வேலைக்காரனிடம் ஒரு வாழைக்குலையை அருகில் உள்ள கோவிலில் கொடுக்கும் படி கூறினான்.

அன்றிரவு அவன் கனவில் வந்த கடவுள், பக்தனே நீ கொடுத்து விட்ட ஒரு வாழைப்பழம் எனக்கு கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி என்றார்.

அடுத்த நாள் வேலைக்காரனை அழைத்த முதலாளி, நான் கொடுத்த வாழைக்குலையில் ஒரு பழத்தை மட்டும் கோவிலுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியை என்ன செய்தாய் என்று அதட்டினான்.

வேலைக்காரனோ பதற்றத்துடன் இல்லை ஐயா! வாழைக்குலையில் இருந்த ஒரு பழத்தை மட்டும் பிடுங்கி பிச்சைக்காரனுக்குக் கொடுத்தேன்.

மிகுதியை முழுவதுமாய் கோவிலில் தான் ஒப்படைத்தேன் என்றான்.

அப்போதுதான் அந்த ஒரு பழம் எனக்குக் கிடைத்தது என்ற கடவுளின் வார்த்தை முதலாளிக்குப் புரிந்தது.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்

**சிவம் வதிரி**

**வியாசரே நான் திருமணம் செய்யலாம் என்று முடிவெடுத்திருக்கிறேன். இதற்குத் தங்களின் பதில் என்ன?**

கில்லி படத்தில் அர்சுணரு வில்லு அரிச்சந்திரன் சொல்லு இவனோட தில்லு பொய்க்காது என தெனாவெட்டாக பாடல் பாடிக்கொண்டு திரிந்தவர்களை, எங்கே செல்லும் இந்தப் பாதை யாரோ யாரோ அறிவாரோ என்று பாட வைத்துவிடுகிறது இந்தக் கல்யாண வாழ்க்கை.

தம்பி இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. ஒன்றுக்கு பத்துத்தரம் யோசனை செய்து முடிவெடுக்கவும். அனுபவத்தில் சொல்கிறேன் கேளடா பிளீஸ்.

**சயந்தன் விஸ்வமடு**

**இந்த உலகம் கடவுளால் உருவானதா? தூசு படலத்தால் உருவாக்கப்பட்டதா?**

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவ லிங்கம்

கள்ளப்புலன் ஐந்தும் காளா மணி விழக்கே

என்கிறது திருமந்திரம்.

நம்பாதவர்களுக்கு கல். நம்பியவர்களுக்கு அது கடவுள் அவ்வளவே.




இந்த உலகத்தில் பண விடயத்தில் நேர்மையானவர்கள் பலரும் இருக்கிறார்களா வியாசரே?

**நவரூபன் சங்கத்தானை**

**கைதடி, நாவற்குழிப் பாலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மின்விளக்குகள் ஒளிர்வதற்கு IMF இடம் கடன்பெற வேண்டுமா வியாசரே?**

எம்மிடம் இருக்கும் பிரச்சினையே இதுதான். அபாயகரமான இடங்களில் மின் குமிழ்களை ஒளிரவிடுவது ஒரு சிறிய வேலை.

அந்த சிறிய வேலையைச் செய்விக்க அதில் ஒரு உயிர் போக வேண்டி இருக்கிறது.

அப்படி உயிர் போனவுடன் அடித்துப் பிடித்து வேலை செய்வதிலும் அனர்த்தம் நடக்க முன்னர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையைச் செய்யலாமே?

**சுதன் குப்பிழான்**

**புலிகளை அழித்துவிட்டோம் என்கிறார்கள் பிறகேன் கைதுகள் நடைபெறுகின்றன வியாசரே?**

புலிகள் மீள் உருவாக்கம் பெற்று விடக்கூடாது என்பதற்கானதே இந்தக் கைதுகள் என்கிறது அரசு.

மடிந்துபோன உறவுகளை நினைவு கூர உறவுகளுக்கு உரிமையுண்டு என்று கூறுவதும் அரசுதான்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நலிவடையச் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது அரசு.

என்னமோ நடக்குது மர்மமா இருக்குது.

கடவுளுக்கே வெளிச்சம்.

**முகுந்தன் இளவாலை**

**மனிதர்களைப் புரிந்து கொண்டு நடந்தால் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைத்துவிடுமல்லவா வியாசரே?**

மனிதர்கள் பலவிதமானவர்கள். ஆயினும் இரண்டு விதமான மனிதர்கள் எம் மனதில் நீங்கா இடம்பிடித்திருப்பார்கள்.

ஒன்று அன்பினால் நம்மை வென்றவர்கள். மற்றையது துரோகத்தால் நம்மை வென்றவர்கள்.

இவர்கள் இருவரையும் எம் இறுதி வரை மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஓய்வு பெற்ற அதிபர் செல்லத்துரை நடராஜா அவர்கள் தனது 90 ஆவது வயதில் தேகவியோகம் அடைந்துவிட்டார். விழுவளை எழுது மட்டுவாளைச் சேர்ந்த நடராஜா அவர்கள் சைவப்பற்று மிகுந்தவர். சிறந்த சமூக சேவையாளர். அவருக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் எழுந்தார். தாவடியைச் சேர்ந்த பிறப்பு இறப்புப் பதிவாளர் அன்னலிங்கம் செந்தில்குமரேசன் அவர்கள் காலமானார் என்ற செய்தியறிந்து துயரடைகின்றோம்.


வலம்புரிப் பத்திரிகையின் விற்பனை முகவராகவும் இருந்த அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி திரும்பவும் ஒரு தாழமுக்கம் வருகுதாம்.

**சாத்திரியார்:-** கங்காணியார் உந்த யூரியுப்புகளைப் பார்த்துப் போட்டார் போல, யூரியுப்புகளில போடப்படும் தலைப்புகள் அச்சம் தருவதாகவும் அதிர்ச்சி கொடுப்பதாகவும் தான் இருக்கும்.

ஆனால் செய்தியைப் பார்த்தால் தலைப்புக்கும் செய்திக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. பொது



செல்லத்துரை
நடராஜா



அன்னலிங்கம்
செந்தில்குமரேசன்

வில மாரிகாலம் எண்டால் மழைதானே. அந்த மழை வரும் என்பதை முன்கூட்டியே அறிந்து சொல்லுகிற போது ஏதோ மாரி காலத்தில இல்லாத மழை பெய்யப் போகிறதாக நாங்களும் கற்பனை செய்யிறம்.

அதால தான் தாழமுக்கம்... தாழமுக்கம்.. எண்டு முணுமுணுக்கிற நிலைமை வந்திட்டுது.

**மூப்பர்:-** கங்காணியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அண்மையில எங்கட வடக்கில சூறாவளி அடிக்கும் எண்டு பலரும் சொன்னவியள். கடைசியாக என்ன நடந்தது.

**விதானையார்:-**

என்ன இருந்தாலும் அண்மையில வடக்குக் கிழக்கில கடும் மழை பெய்ததால மக்கள் கடும் இடர்களைச் சந்தித்தவியள். இருந்தும் அரச மையைச் சுமுகமாக்கியதைப்பார்த்தம்.

இப்படித் தான் எங்கும் சம்பந்தப்பட்ட அரச நிர்வாகங்கள் தத்தம் பணிகளைச் சிறப்பாகச் செய்து முடித்தினம். அதால வெள்ள அனர்தத்தின்ர தாக்கம் வலுக்குறைந்து போனது. இதைக் கட்டாயம் ஆலடியில பாராட்டித்தான் ஆகவேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று பாராட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய நிசப்தத்தை விதானையார் விசுவலிங்கம் கலைத்தார்.

**விதானையார்:-** அது சரி சிவபூமி என்று போற்றப்படும் எங்கட மண்ணில கன்றுத்தாச்சி மாட்டை வெட்டுகிற கொடுமை நடக்குதெண்டால், கொடுமையும் நியாயப்படுத்தப்பட்டுவிடும்.


ஆகையால கன்றுத்தாச்சி மாட்டை வெட்டுவது போன்ற கொடூரச் செயல்களுக்காக சட்டத்தரணிகள் வாதிடமாட்டார்கள் என்ற ஒரு நிலைப்பாடு எங்கட சட்டத்தரணிகளிட்ட இருக்குமாயின், பாதகச் செயல்களைச் செய்கின்றவர்கள் சற்று யோசிப்பினம்.

**மூப்பர்:-** அதுசரி, யாழ்ப்பாணத்தில இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகிச் சென்ற ஒரு உறுப்பினர் பாராளுமன்ற வளாகத்தில வைத்துத் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகுது.அது உண்மை தானோ.

**விதானையார்:-** எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டார் எண்ட போது மனதுக்கு வேதனையாகத் தான் இருந்தது. எனினும் அதுபற்றி எங்கட மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இதற்குக் காரணம் குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் முன்னுக்குப்பின் முரண்பாடான செயற்பாடு தான். அதே நேரம் அவர் பாராளுமன்றத்தில ஆற்றின கன்னியுரையில ஒரு கனதியும் காத்திரமும் இருப்பது தெரிந்தது.

என்ன இருந்தாலும்



## பண்ணை வீதியில் கடல் கழிவு உடனடியாக அகற்றப்பட்டது

நிர்வாகங்களும் பொது அமைப்புகளும் தனி நபர்களும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வெள்ள அனர்த்தத்தில இருந்து மக்களைக் காப்பாற்றிப் போட்டினம்.

**வாத்தியார்:-** உண்மை தான். யாழ்ப்பாணத்தில கடும் மழை பெய்த போது கடல் கொந்தளித்தது.

இதால தீவகத்திற்குச் செல்லுகின்ற பண்ணைப் பாதையின்ர மேற்குப் பக்கமாக கடலில கிடந்த குப்பைகள், கழிவுகள், சாதாளைகள் என எல்லாமும் பண்ணை றோட்டில வந்து குவிந்தது. இருந்தும் சம்பந்தப்பட்ட நிர்வாகம் உடனடியாக அந்தக் குப்பைகளை அகற்றி நிலை

நிலைமை எப்படி என்பதை நாங்கள் ஒரு கணம் சிந்திக்க வேணும்.

**சிறாப்பர்:-** காலம் கலியுகம். இப்படியான கொடுமைகளைச் செய்வதற்கு எங்கட சமூகத்தில ஆட்கள் இருக்கத்தான் செய்யினம்.

கன்றுத்தாச்சி மாட்டை வெட்டிக் கொலை செய்து அதை இறைச்சி ஆக்கின ஈனப் பிறவிகளுக்காக நீதிமன்றங்களில வாதிடுவதற்கு எங்கட சட்டத்தரணிகள் மறுப்புத் தெரிவிக்க வேணும்.

இதைச் செய்யாமல் அவர்களுக்காகவும் வாதிடுவதற்கு எங்களிட்ட ஆட்கள் இருப்பினமாக இருந்தால், எந்தப் பெரிய

எங்கட கௌரவத்தை நாங்கள் தான் காப்பாற்ற வேணும். ஆகையால தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று பாராளுமன்றம் செல்பவர்கள் ஒழுக்க விதிமுறைகளைப் பின்பற்றி தமிழ் மக்களின்ர கௌரவத்தைப் பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்த வேணும், இல்லை எண்டால் அது எங்கட இனத்தின்ர கௌரவத்திற்கு தான் பங்கம்.

**சாத்திரியார்:-**

விதானையார் சொல்லுறது உண்மை தான். ஆனால் எங்கட மக்களும் கொஞ்சம் விழிப்படைய வேணும்.

இந்தாப்பாருங்க வடக்கு மாகாணத்தில 32 மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இதில இரண்டு மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களுக்குரிய சிபார்சுகளைத் தாங்கள் செய்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரனும் சாள்ஸ் நிர்மலநாதனும் தெரிவித்திருந்தினம்.

இதால அவர்கள் கடும் விமர்சனத்திற்கு ஆளாகிச்சினம்.

அதிலும் குறிப்பாக விக்னேஸ்வரனுக்கு எதிரான கண்டனங்கள் கடுமையாக இருந்தன. ஆனால் இன்னும் 30 மதுபானசாலைகளுக்கான அனுமதிகளை யார் சிபார்சு செய்ததெண்டு தெரியாமல் இருக்குது.

ஆயினும் அது பற்றி எங்கட மக்களுக்கும் கருசனை இல்லை.

ஆக, உண்மையைச் சொன்னவர்கள் மாட்டுப்பட்டது தான் மிச்சம். இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடி அமைதியாயிற்று. அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** பொது மக்கள் தங்கட கருமங்களை இலகுவாகவும் குறைந்த நேரத்தோடும் செய்து முடிப்பதற்கான ஏற்பாடுகள் எங்கட இடங்களில மிகக் குறைவு எண்டு தான் சொல்ல வேணும்.

**மூப்பர்:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** இப்ப வங்கி நடவடிக்கைகளில ஏ.ரி.எம், சி.டி.எம் மூலமாகத் தான் காசு எடுக்கிறதும் போடுறதும் நடக்குது.

எனினும் சில இடங்களில காசு எடுப்பதற்கும் காசு போடுவதற்கும் ஒரே ஒரு மெசின் இருப்பதால பொது மக்கள் நீண்ட நெடுநேரம் வரிசையில காத்திருக்க வேண்டி இருக்குது.

உதாரணத்திற்கு கொக்குவில் -வேலணை போன்ற இடங்களில இந்த நிலைமை இருக்குது.ஆகையால வங்கி நிர்வாகங்கள் இது விடயத்தில கவனம் செலுத்த வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



36 செங்கை ஆழியான்

தூக்கில் மாட்டுகின்ற தண்டனைகளை ஆங்கிலேயர் காலத்தில் "அலுகோசுகள்" எனப்பட்டவர்களே செய்தனர். ஒல்லாந்தர் காலத்தில் அலுகோசகளாக இருந்தவர்கள் ஆபிரிக்கக் காப்பிரியர்களாவர். ஆங்கிலேயர் காலத்தில் அவ்வேலைகளைச் செய்வதற்கு நன்கு குடித்துச் சுய அறிவை இழக்கும் சுதேசிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தத் தூக்கு மண்டபத்தை முற்ற வெளியில் நின்று பார்க்கலாம்.

மக்கள் குழுமி நின்று பார்க்கத்தக்கதாகவே குற்றவாளிகளுக்கான தூக்குத் தண்டனையை அலுகோசுகள் நிறைவேற்றினர். நீதிபதிகளினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கோட்டையின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

ஒல்லாந்தரின் படை வீரர்கள் தங்கிய பாசறை வீடுகளை ஆங்கிலேயர் சிறைச்சாலைக்கான கட்டடங்களாக மாற்றிய மைத்தனர். அவற்றின் வலதுபக்கச் சுவரில் "கடவுளே அதியுயர் நீதிபதி" (God is the Supreme Judge) என்ற வாக்கியங்களைப் பொறித்தனர்.


கோட்டையின் ஆங்கிலேயக் கமாண்டர் காற்றுவாங்குவதற்காகக் கோட்டைச்கு வெளியே உலா வருவான் ஒற்றைக் குதிரை பூட்டிய "றிச்சோ" போன்ற "கோச்" வண்டியிலேறிப் பவனி வருவான். அவன் பின்னால் கொடி தாங்கிய சிங்களவர்கள் சிலர் வர அவன் வண்டியின் முன்னால் மேளங்களை இதமாக முழக்கியவாறு தமிழர்கள் சிலர் நடப்பார்கள். கோச் வண்டியின் இருபுறமும் துப்பாக்கி ஏந்தி குதிரை வீரர்கள் வருவார்கள் படாடோபமாகவும் வெகு அமர்க்களமாகவும் கோட்டையின் கமாண்டர் வாழ்ந்தான்.

யாழ்ப்பாணக் கோட்டை வெகு உற்சாகமாக விளங்கியது. கோட்டை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்து. கோட்டையைச் சுற்றியுள்ள முற்ற வெளியில் அன்று பிற்பகல் மக்கள் நிரம்பி வழிந்தனர். கோட்டை முனியப்பர் கோயிலுக்குச் சமீமாக இடப்பட்டிருந்த பாரிய அலங்காரப் பந்தரிலே அரசாங்க ஏசண்டர் துவைனம், தனது பரிவாரங்களுடன் அமர்ந்திருந்தார்.

ஆம். அன்று பிரித்தானிய மகாராணி விக்டோரியாவின் ஐம்பதாவது வருட மகுடோற்சவக் கொண்டாட்டத்தை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு ஏழரை மணிக்கு வாண விளையாட்டு நிகழவிருந்தது. இங்கிலாந்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் கொண்டு வரப்பட்ட வாணங்கள் (பட்டாசுகள்) வேடிக்கை காட்ட விருந்தன. முற்றவெளி கொள்ளாதபடி சனத்திரள் குவிந்து நின்றது.

வாணவிளையாட்டு ஆரம்பமானது. பந்தரில் பல வகை வாணங்கள் குவிந்திருந்தன. (தொடரும்)

---




காலத்தின் பதிவு 133

# கடல் புறா

ஒரு முறை கடற்கரையை நோக்கியிருந்த வாயில் பக்கம் சென்று கடற்புறத்தை நோக்கி விட்டு மீண்டும் அதன் எதிர்ப்புற வாயிலின் படியில் நின்று பகிட்பாரிஸான் மலைப்பகுதியையும் தன் கண்களால் ஆராய்ந்தான். பிறகு வடபுறச் சாளரத்தின் வழியாக நகரத்தின் பெரும் கட்டடங்களையும், வீதிகளில் உலாவிக் கொண்டு பணிபுரிந்து கொண்டுமிருந்த மக்களையும் பார்த்துத் திருப்தியுடன் தலையை இருமுறை அசைத்தும் கொண்டான். அடுத்தபடி அந்தத் திருப்தி முகத்தில் பூர்ணமாகப் பிரதிபலிக்க அறை நடுவிலிருந்த பஞ்சணையில் அமர்ந்து எதிர்ப்பக்கத்தில் இருந்த மதுக் குப்பியையும் வெள்ளிக் கிண்ணமொன்றையும் கையில் எடுத்துக் கொண்டு காவலனொருவனை அழைத்துக் கூலவாணிகன் சேந்தனை உடனடியாகக் கூப்பிட்டு வருமாறு உத்தரவிட்டான். அந்த உத்தரவின் விளைவாக அறைக்கு வந்த கூலவாணிகன் அங்கு தனக்குக் கிடைத்த பணியைக் கேட்டதும் பெரும் கிலிக்கு உள்ளாகி, "ஐயையோ! எனனால் முடியாது. பெரும் ஆபத்து. என் தலை போய் விடும்," என்று கதறினானென்றால் அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது.

காவலன் அழைப்புக்குப் பணிந்து மாடியறையில் நுழைந்த போது இளையபல்லவன் இரு கைகளிலுமிருந்த மதுக்குப்பியையும் வெள்ளிக் கிண்ணத்தையும் முகத்தில் பிரதிபலித்த லேசான வெறிக் குறியையும் கண்டதுமே தனது முகத்தைக் கசப்பாக்கிக் கொண்ட கூலவாணிகன், படைத்தலைவன் பேச ஆரம்பித்ததும் பெரும் பிரமிப்பின் வசப்பட்டான். கூலவாணிகன் உள்ளே வந்ததுமே "சேந்தா! அதோ அந்தக் கிண்ணத்தை எடுத்துக்கொள். உனக்கும் சிறிது மது தருகிறேன்," என்று படைத்தலைவன் செய்த குடிமரியாதையை வேண்டாமென்று கையாட்டத்தினாலேயே உணர்த்திய கூலவாணிகன் சேந்தன் எதற்கு அழைத்தீர்கள் படைத்தலைவரே! என்று ஆரம்பத்திலேயே நேரிடையாகக் கேள்வி வீசினான்.

என்ன அவசரம் சேந்தா? உட்கார்" என்று எதிரேயிருந்த மஞ்சத்தைக் காட்டிய இளையபல்லவன். அப்படித் தான் சொன்ன பிறகும் சேந்தன் நின்றுகொண்டேயிருந்ததைக் கவனித்ததும் மதுக் குப்பி, கிண்ணம் இரண்டும் இரு கைகளிலும் துலங்க எழுந்திருந்த, இரண்டு கைகளாலும் சேந்தனைத் தள்ளிக்கொண்டு போய், தோளைப் பிடித்து அழுத்தி எதிரேயிருந்த மஞ்சத்தில் உட்கார வைத்தான். அந்த உபசரணையால் பெரும் அவஸ்தை அடைந்த சேந்தன் இளையபல்லவன் தனது தோளைப் பிடித்து அழுத்தியபோது மதுக்குப்பியிலிருந்து உடைமேல் அருவியாக ஒழுய சிவந்த மதுவை மிகுந்த வெறுப்புடன் ஒரு கையால் துடைத்துக்கொண்டான்.

துடைக்காதே சேந்தா! மது சிவந்தது. ரத்தம் போன்றது! என்று நகைத்தான் இளைய பல்லவன்.

## முள்ளை முள்ளால் எடுக்கலாம்

ஏன் துடைக்கக் கூடாது? என்று சற்று வெறுப்புடன் சீறவும் செய்தான் சேந்தன்.

இப்போது மது ஒடுகிறது, துடைக்கிறாய். இதே சிவப்புடன் ரத்தம் ஓடினால் என்ன செய்வாய்?" என்று மறுபடியும் நகைத்தான் இளையபல்லவன்.

ஏன் ரத்தம் ஓட வேண்டும்? சேந்தன் குரலில் திகைப்பிருந்தது. கத்தியால் உன்னைக் குத்தினால் ரத்தம் வராதா வரும். ஆனால் யார் குத்தப் போகிறார்கள்? யாரும் குத்தலாம். பூர்வகுடிகள் குத்தலாம் பலவர்மன் குத்தலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தரமாகட்டும்

இருள் சூழ்ந்த வாழ்வில்
ஒளியேற்றும் இக் காலம்
கனிந்திருக்கும் இவ் வேளை
இனவாதம் மதபேதம்
கலைந்த மனதோடு
யாவரும் ஒற்றுமையாய்
ஒருவரை ஒருவர் நேசிக்கும்
நல்மன சிந்தையோடு
சிந்திய குருதிக்கும்
சிவந்த கண்களுக்கும்
வலிகள் கண்ட உள்ளங்களுக்கு
மனதில் இன்ப ஒளி வீசவும்
வாழ்வில் செழிப்பு பெறவும்
பாறையில் செதுக்கிய
சிற்பங்களாய் மிளிர்ந்து
வரலாற்றில் இடம்பிடித்து
அனைத்து மனங்களையும்
வென்றிடும் நல்லாட்சி
இவ் திரு நாட்டில்
நீதியாய் நிரந்தரமாகட்டும்.

சி.இன்பராஜ்,
மந்துவில் மேற்கு.

## காலம் வரும்



தைரியத்தின் தார்பரியம்
மிலேச்சம் கொள்ளும்
அசாத்தியம் வேர் புனைந்து
சாத்தியம் கொள்ளும்
மானிடத்தை மந்தைகள்ஆக்கும்
விந்தையில் புது உலகம்
வியப்பிலும் தோற்பிலும்
புதியதல்ல
காலமாற்றம் கணக்குப் போடும்
உயர்வதுவும் தாழ்வதுவும்
உலக நியதி
ஒப்பனைக்குப் படிப்பினை
தாராளங்கள் ஏராளம்
கற்பித்திருக்கிறது
கால் உயர்த்தி தமிழா
நீ மேலெழு
காலம் உனக்கும்
கனிந்து வரும் நாளும்
வரும் ஓர் நாள்.

யாழ்.வாகீசன்

## நியாயத்தைத் தேடுகிறேன்...

நன்னெறி பேணா
நல் வழி காணா
நம் நாட்டு இளையோரே!
போதையால்
போதை தலைக்கேற்றி
சீரழிக்கின்றாய்- நம்
நாட்டை சீரழிக்கின்றாய்
வாள்வெட்டு கலாச்சாரம்
வானுயர ஏற்றுகின்றாய்
வாளெடுத்து போராட
வயசில்லை எந்தனுக்கு
ஆதலால்...!
வாய்மூடி நியாயத்தை
மௌனமாய் தேடுகின்றேன்!



சாந்தையூரிவன்

## மௌனத்தின் தேடல்- 739



## அரசின் மாற்றமும் இயற்கையின் சீற்றமும்

எறிகணைகள் எம்மைத் துரத்திடவே
காடும்மேடும் கடல் தாண்டிவந்தோம்!
நெறிமுறை இல்லாத பேரிடர்கள்
நெருப்பாய் எம்மை ஓடவிட்டதே!
வறுமையில் வாடிய எம் வாழ்க்கை
வெறுமையாய் போனதே அன்றொருநாள்!

எஸ்.சிவானந்தாராஜா

## மௌனத்தின் தேடல்- 740



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## மனிதப்பூச்சிகளுக்கு...

துல்லியமான அளவை இல்லா காலத்தில்
விரற்கிடை சாண் முழமெனக் கணித்து
கோயில் கோபுரங்கள் கோட்டை கொத்தளங்கள்
பாரிய குளங்கள் நீர்ப்பாசன வாய்க்கால்கள்
அமைத்து இயற்கையுடன் ஒட்டி வாழ்ந்தோம்
இன்றோ சந்திரனில் கொடி செவ்வாயில்
குடியேற்றம் என்று கொக்கரிக்கும்
மனிதப்பூச்சிகளுக்குக் கொட்டும் மழைக்கு
வடிகால் அமைக்கத் தெரியவில்லை.

பிரமா யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## இப் படமே சமர்ப்பணம்

முள்முருங்கை முட்கிளுவை வேலி
பனையோலை பனைமட்டை வரிச்சு
வேலி வரிச்சுக்கிடையே பொட்டுக்கள்
பொட்டுக்கள் வழியே போக்குவரத்து
போக்குவரத்தின் போது பாசங்கள் பேசும்
மழை வெள்ளமும் வேலி வழியே ஓடும்
எல்லா வெள்ளமும் குளத்தை அடையும்
குளம் நிரம்பினால் நீர் வயலை அடையும்
இது தான் அன்றைய இயற்கையின் வடிகால்
காலில் மண் படாமல் மாளிகை செல்வொருக்கு
இப்படமே சமர்ப்பணம்.

பி.மதுஷ்சன்,தையிட்டி.

## தத்தளிக்கும் மக்கள்

நீரின்றி அமையாது உலகு
என்றனர் சான்றோர்
மழை கனதியாகக் கொட்டியது,
வெள்ளக்காடாக மாறியது குடிமனை
வீடின்றி உணவின்றி உயிரை மட்டும்
தாங்கிய நிலையில்
வெள்ளக்கடலில் தத்தளிக்கின்றனர்
நீருக்குள் மூழ்கும் நிலையில்
கூட தாகத்திற்கு குடிநீர்
சுமந்து செல்லும் காட்சி
நெஞ்சத்தை வருடுகிறது கண்ணீர்
மல்கிறது நீரிலே உயிர்பிரிந்த
உறவுகளுக்காக துயர் அடைகிறோம்
ஆண்டவன் தான் இந் நிலையை
மாற்றவேண்டும்.

அபி குலமாலிகா, சித்தன்கேணி.

## அச்சுறுத்தும் வெள்ளம்

வானத்து மேகத்துக்கு என்ன கவலை என்று
தெரியவில்லை இவ்வளவு மழைபெய்து மக்களை
இடம் பெயர வைத்து விட்டதோ
வீடுகளையும் அழித்துப் போட்டதோ
பூமியை வெள்ளத்தால் நிரம்பி விட்டதோ
மனிதன்மேல் என்ன கோபம் என்று
தெரியவில்லை இவ்வாறாக மனிதனை
துன்பப்படுத்தும் வெள்ளம் இனியாவது
இயற்கையை அழிக்காதிருப்போம்
உலகை நேசிப்போம்.

த.விஜயபவன்,அரசடி வட்டுக்கோட்டை.

## இன்பமும் துன்பமும்

கூட்டமாய்க் கூடிக் குளிப்போர்
சுத்தம் சுகத்தை வாரித் தருமென்றும்
நித்த மிதைத் தவறாது செய்யும்படி
சத்தமிட்டு ஒலிபரப்புச் செய்கின்றவர்
முக்கிய கருமங்களை ஒன்று கூடி
ஐக்கியமாய்ச் செய்வதும் ஒற்றுமையே
ஆறுமலையருவி இல்லையெனினும்
ஆறுதலை தருவதில் என்றென்றும்
இயற்கையன்னை பின் நிற்பதில்லை
இடரிலும் இன்பம் கலந்திருக்கும்
இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் நடத்தும் திருவிளையாடல்

க.நாகராசா, நுணாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: பாசமலர்
இசை: விஸ்வநாதன் – ராமமூர்த்தி
பாடியவர்கள்: TM.சௌந்தர்ராஜன், P.சுசீலா
வரிகள்: கண்ணதாசன்



மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வண்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வண்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

யானைப் படை கொண்டு சேனை பல வென்று
ஆளப் பிறந்தாயடா
புவி ஆளப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு இளமை வழி கண்டு
வாழப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு... இளமை வழி கண்டு...
வாழப் பிறந்தாயடா

தங்கக் கடிகாரம் வைர மணியாரம்
தந்து மணம் பேசுவார்
பொருள் தந்து மணம் பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்..உலகை விலை பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்

நதியில் விளையாடி கொடியின் தலை சீவி
நடந்த இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

சிறகில் எனை மூடி அருமை மகள் போல
வளர்த்த கதை சொல்லவா
கனவில் நினையாத காலம் இடை வந்து பிரித்த
கதை சொல்லவா..
பிரித்த கதை சொல்லவா

கண்ணில் மணி போல மணியின் நிழல் போல
கலந்து பிறந்தோமடா
இந்த மண்ணும் கடல் வானும் மறைந்து
முடிந்தாலும் மறக்க முடியாதடா
உறவைப் பிரிக்க முடியாதடா
ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்

அன்பே ஆரிராரோ ஆரிராரோ.........

# அலுவலகத்தில் நாகரிகமற்ற ‘நச்சு கலாசாரம்...’

**1. கலாசார குறியீடு**

தலைவராக இருப்பவர் தன் நிறுவனத்தில் ஒரு தெளிவான கலாசார அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பின் வழிகாட்டுதலில் முழு குழுவும் செயற்பட வலியுறுத்த வேண்டும். இதன் மூலம்தான் பணியிடத்தில் சிறப்பான பொசிட்டிவான சூழல் உருவாகும்.

**2. வழிகாட்டல் திட்டம்**

நிறுவனத்தில் ஒரு வழிகாட்டல் திட்டத்தை உருவாக்கி அதை அனைவரும் கடைப்பிடிக்க வலியுறுத்தலாம். குழு உறுப்பினர்களை இரண்டிரண்டு பேராகப் பிரித்து அவர்களை ஒருவருக்கொருவர் வழிகாட்டுதலாக இருக்கும்படி சொல்லி செயற்பட வைக்கும்போது அந்த இருவருக்குள்ளும் நல்ல புரிதல் ஏற்படும். அதன் மூலம் குறிப்பிட்ட வேலையானது சிறப்பாக நடைபெறும்.

**3. உறுப்பினர்களைப் பற்றி அறிதல்**

அவ்வப்போது நாம் நம் குழு உறுப்பினர்களையோ நமது அலுவலகத்தில் பணிபுரிபவர்களையோ அழைத்து, அவர்கள் என்ன காரணத்துக்காக இந்த அலுவலகத்தில் அல்லது குழுவில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் அவர்கள் எந்தக் காரணத்துக்காகவெல்லாம் குழுவை விட்டோ, அலுவலகத்தை விட்டோ வெளியேறிவிட வாய்ப்புள்ளது என்பதையும் தெரிந்து கொள்ள முடியும். அதன்மூலம் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள எந்த ஒரு மாற்றத்தையும் எதிர்கொள்ள ஒரு தலைவருக்கு வசதியாக இருக்கும்.

**4. தோல்வியைக் கொண்டாடுதல்**

எப்போதுமே நாம் வெற்றியை, சாதனையை மட்டுமே கொண்டாடிப் பழகியிருக்கிறோம். ஆனால் தோல்வியையும் பொசிட்டிவான வகையில் எடுத்துக் கொள்ளப் பழக வேண்டும். ஏனெனில் அப்போதுதான் அது கற்றுத்தரும் பாடத்தை ஒரு தலைவராக நம்மால் உணர முடியும். மேலும் தோல்விகளைக் கொண்டாடுவதன் மூலம் அலுவலகத்தில் உள்ளவர்கள் நம்மோடு இணைந்து சுதந்திரமாக, தோல்வி குறித்த பயமில்லாமல் இன்னும் கிரியேட்டிவிட்டியுடன் ஈடுபாட்டுடன் பணியாற்றுவார்கள்.

**5. உறுதியான சட்டதிட்டம்**

இது எதைக் குறிப்பிடுகிறது என்றால் நமது அலுவலகத்தில் பணிபுரிபவர்களிடையே எந்த விதமான தேவையற்ற கேலி, கிண்டல் போன்ற பிரச்சினைகளும் இல்லாமல் பார்த்துக்கொள்வதாகும். ஒருவரைக் காயப்படுத்தும் எந்தவிதமான செயல்களையும் அலுவலகத்தில் ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டோம் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

**6. கிசுகிசுப்பு இருக்கக் கூடாது**

அலுவலகத்தில் ஏதேனும் வதந்தி பரவத் தொடங்கினால் முதலில் அதைத் தடுத்து புறக்கணிக்க வேண்டும். வதந்திகள் வளர்ச்சிக்குத் தடை. எனவே வதந்திகளுக்கு உடனே நாகரிகமான முறையில் தீர்வு காண முயல வேண்டும்.

**7. முன்னுதாரணமாக நடந்து கொள்ளுதல்**

அலுவலகத்தில் தலைவராக இருப்பவர் முடிவு எடுப்பது, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, சக மனிதர்களை மதிப்பது என அனைத்திலும் பிறருக்கு முன்னுதாரணமாக நடந்து கொள்ள வேண்டும். வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

**8.மோதல் மேலாண்மைத் திறன்கள்**

ஏதேனும் புதிய செயற்பாடுகள் குறித்து நம் குழுவுக்குப் பயிற்சி அளிக்கும்போது அதில் ஏற்படும் பிரச்சினைகளை எப்படித் தீர்த்துக் கொள்வது. இருவருக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகளை எப்படி தீர்ப்பது என்பவை குறித்து குழுவுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்க வேண் டும்.

**9. பிரச்னைகளைக் காது கொடுத்து கேட்டல்**

குழு உறுப்பினர்களுக்கு ஏதேனும் பிரச்சினை குறித்து தெரிவிக்கவோ, ஏதேனும் புதிய யோசனை குறித்து கருத்துத் தெரிவிக்கவோ வாய்ப்பளிக்கும் வகையிலான செயற்றிட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். உறுப்பினர்கள் தெரிவிக்கும் பிரச்சினை அல்லது கருத்துகளை நாம் காது கொடுத்து கேட்கிறோம். அவர்களின் கருத்துகளை வரவேற்கிறோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அப்போதுதான் தலைமையின் மீது உரிய நம்பிக்கை ஏற்படும். குழு உறுப்பினர்கள் எவ்வித கவலையும் இன்றி துடிப்புடன் பணியாற்றுவார்கள்.

**10. நலன் பேணும் நிகழ்ச்சிகள்**

ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஆப்கள் (APP) ஏராளமாக உள்ளன. உதாரணமாக, தியானம் செய்ய, உடற் பயிற்சி செய்ய, யோகா செய்ய அப்ளிகேஷன்கள் வந்துவிட்டன. இவற்றில் குழு உறுப்பினர்கள் பங்கேற்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண் டும். அதேபோல ஊழியர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும். இவ்வாறு செய்யும்போது ஊழியர்கள் தேவையற்ற நச்சு கலாசாரத்தால் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

427

வலம்புரியின் மருத்துவச்சுடர்


## கண்களின் ஆரோக்கியத்திற்கு...

கண் என்பது ஒரு முக்கியமான புலனங்கம் ஆகும். அதன் ஆரோக்கியத்தை பேணுவது அவசியமாகும்.

கண்ணிற்கு ஆரோக்கியம் தரும் செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் கண் நோய்கள் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம். அடிக்கடி கண்ணை நீரினால் கழுவுதல், கண் பயிற்சி செய்தல், கண் வைத்தியரை நாடி பரிசோதனை செய்து கொள்ளல் போன்றவற்றை தவறாமல் செய்ய வேண்டும்.

தற்போது சமூகத்தில் முக்கியமானதொரு பிரச்சனையாக உலர் கண் நோய் (Dry eyes) காணப்படுகின்றது. இது, சாதாரணமாக அனைவருக்கும் ஏற்படும் ஒரு நோய் நிலைமையாக காணப்படுகின்றது. ஒருவர் அதிகமான நேரம் புத்தகம் வாசிப்பதாலும், அதிகமாக மின்விசிறி மற்றும் காற்றுப் பதனாக்கி உள்ள சூழலில் இருப்பதாலும் இந்த உலர் கண் நோய் ஏற்படும். அதோடு தூர பயணம் செய்பவர்கள் மற்றும் நெடுந்தூரம் தொடர்ச்சியாக வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களில் கூட இந்த நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

இது பல விதங்களில் ஏற்படலாம். உலர் கண் நோய் இருப்பவர்களில் கண் சிவப்பாக காணப்படும், கண் எறிவு இருக்கும், கண்ணை திறந்து மூடுவது சிரமமாக இருக்கும் மற்றும் நித்திரையின் பின் கண் திறக்க இயலாமல் இருக்கும். சிலருக்கு, கண்ணில் மண் விழுந்தது போல ஒரு உணர்வு இருக்கும். இவற்றிற்கு கண்ணீர் சுரப்பது குறைவாக இருப்பதே காரணமாகும்.



இவ்வாறான நிலைமை காணப்படுபவர்கள் அடிக்கடி கண்ணை நீரினால் கழுவுவதன் மூலமும், இருபது நிமிடங்களுக்கு ஒரு முறை இருபது அடி தூரத்தைப் பார்த்து இருபது தடவைகள் கண்ணை மூடி விழிப்பதன் மூலமும் இந்த உலர் கண் நோயின் தாக்கங்களை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் கண்ணிற்கு சில பயிற்சிகளை செய்து, கண்ணை சிறிது நேரம் ஓய்வாக வைத்திருப்பதன் மூலமும் இந்நோயின் தாக்கங்களை வெகுவாக குறைத்துக்கொள்ளலாம். இதற்கு மேலதிகமாக செயற்கைக் கண்ணீரைப் பயன்படுத்தலாம். வைத்தியரின் மருந்து சீட்டு இல்லாமலேயே இதனை நீங்கள் மருந்தகங்களில் வாங்கி பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்நோய் தீவிரமடைந்தவர்கள், வைத்தியரின் பரிந்துரைப்படி சில மருந்துகளை எடுக்க வேண்டி இருக்கும். உதாரணமாக, Steroids மற்றும் வேறு சில Non steroidal anti - inflammatory மருந்துகளை எடுத்து இந்நோயினை குணப்படுத்திக் கொள்ளலாம். இதற்கும் குணமடையவில்லை எனில், கண்ணை முற்றாக மறைக்கக் கூடிய கண்ணாடியை வைத்தியர் வழங்குவார்.

சாதாரணமாக நூற்றுக்கு 80% ஆனவர்களில் இந்த உலர் கண் நோய் காணப்படுகின்றது. சிலருக்கு அறிகுறிகள் காணப்படும். சிலருக்கு அறிகுறிகள் இல்லாமலும் இந்நோய் காணப்படும். இதனை கண் பரிசோதனைகள் செய்து பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அதிகமாக மின்விசிறி மற்றும் காற்றுப் பதனாக்கி உள்ள சூழலில் இருப்பதை தவிர்ப்பதால் இந்நோய் ஏற்படாமல் தடுக்க முடியும். அத்துடன் முன்பு கூறிய சில கண் ஆரோக்கியத்திற்கான செயற்பாடுகளையும் செய்து, இந்நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம்.

**Dr. S. T. S. சந்திரகுமார்**
**கண் சத்திரசிகிச்சை நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## நாம் வெற்றி பெறுவோம் என்று எம்மை நாம் நம்பாதபொழுது...

நாம் விழும் ஒவ்வொரு தடவையும் வெற்றிகரமாக எழுந்து வர நாமாக முயற்சி எடுப்போம். நாம் தூக்கிவிட்ட ஒருவர் எம்மையும் தூக்கிவிட வருவார் என்ற எதிர்பார்ப்பு அர்த்தமற்றது. நடைமுறைச் சாத்தியமும் அற்றது. எமக்கு கை கொடுக்க இன்னொருவர் வரக்கூடும். அவருக்கு நாம் ஒரு கைமாறும் செய்ய முடியாமலும் போகக் கூடும்.

உதவிகளும் ஊக்குவிப்புக்களும் பிரதிபலன்களை எதிர்பார்த்து செய்யப்படுபவை அல்ல. அவற்றைச் செய்ய வேண்டியது ஒரு மானிடக் கடமை.

சில உண்மைகள் உணரப்பட உணர்த்தப்பட காலதாமதம் ஆகலாம். உண்மை நிலை உணரப்படும் வரை உணர்த்தப்படும்வரை அது "பொய்" போலத்தோன்றுவது ஒன்றும் புதிர் அல்ல, புதிதல்ல. அதனை உணர்த்த எடுக்கும் முயற்சிகள் சிலசமயம் இலகுவானதாக இருக்காது. இருந்தும் அதற்காக முயற்சிக்காமல் இருக்க முடி யாது.

எமது முயற்சியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் வெற்றிபெறுவோம் என்று எம்மை நாம் நம்பாதபொழுது பிறர் எம்மை நம்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எமது முயற்சிகளின் பொழுது பல சவால்கள் முளைவிடும். இது சர்வநிச்சயமானது. அந்த சவால்கள் தான் எம்மை சரியான பாதையில் நெறிப்படுத்தும்

வழி வாய்க்கால்களாக அமையும். எனவே சவால்களை எதிர்கொள்ள முயலாமல் இருந்துவிட முடியாது.


**Dr.சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வை[illegible] பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் விளங்க வேண்டும்



மேரிமாதவின் அமலோற்பவப் பெருவிழாவை நாம் திருவருகைக் காலத்தின் இரண்டாவது ஞாயிறாகிய இன்று கொண்டாடுகின்றோம். திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் 1854.12.08 அன்று இவ்விழாவை "மரியாவின் அமலோற்பவப் பெருவிழா" என்று கொண்டாட அதிகாரப் பூர்வமாக அறிவித்தார். திருத்தந்தை அவர் தான் எழுதிய Ineffabilis Deus என்ற மடலில் "மனுக்குல மீட்பரான இயேசு கிறிஸ்துவின் பயன்களை முன்னிட்டு கன்னிமரி கருவான நொடிப்பொழுதிலேயே எல்லாம் வல்ல இறைவனது அருளாலும் சலுகையாலும் சென்மப் பாவ மாசு அணுகாதவளாய்த் தோன்றினார்" என்று அறிதியிட்டுக் கூறி அமலோற்பவியான கன்னி மரியா என்ற விசுவாசப் பிரகடனத்தை அறிவித்தார்.

திருத்தந்தையின் அறிவிப்பை உறுதிப்படுத்தும் விதமாக 1858.03.25 பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் பெர்னதத் என்ற பதினான்கு வயது சிறுமிக்குக் காட்சி கொடுத்த மேரிமாதா "நாமே அமல அற்பவம்" என்று அறிவித்தார். அன்றிலிருந்து மேரிமாதா அமலோற்பவி என்பதை பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம்.

இந்த நேரத்தில் இவ்விழா உணர்த்தும் செய்தி என்ன என்று எண்ணுவோம். பைபிளில் பழைய ஏற்பாட்டுப் புத்தகம். 1 குறிப்பேடு 22:07-10 என்ற தெய்வீகத் திருவார்த்தைப் பகுதியில், தாவீது தம் மகன் சாலமோனை நோக்கி, என் மகனே கடவுளாகிய ஆண்டவரின் பெயருக்கு ஒரு கோவிலைக் கட்ட என் மனதில் நினைத்திருந்தேன்.

மாறா ஆண்டவர் என்னோடு பேசி "நீ மிகுதியான குருதியைச் சிந்தினாய், பெரும் போர்களை நடத்தினாய் எனக்கு முன்பாகத் தரையில் நீ மிகுதியான குருதியைச் சிந்தியதால் என் பெயருக்கு நீ கோவில் கட்ட வேண்டாம்" என்கிறார். கடவுள் தமக்குக் கோவில் கட்ட இருப்பவர் தூய்மையாக இருக்கவேண்டும் என்று எண்ணுகின்றார். தன்னுடைய மகனைக் கருவில் சுமந்து பெற்றெடுக்க இருக்கும் மேரிமாதா எவ்வளவு உயர் தூய்மையாக இருக்கவேண்டும் என்று கருதுவார் என உய்த்துணர்ந்து பார்க்கலாம்.

ஆகவே பாவக் கறை இல்லாத தன்னுடைய மகன் இயேசு பிறக்க பாவமாசு அணுகாத மேரி மாதாவைத் தேர்ந்தெடுக்கிறார். மேரிமாதாவை சென்மப் பாவம் இல்லாது விடுக்கின்றார். மேரி மாதாவை கடவுளைக் கருவில் சுமக்கும் தூய்மையிடமாக மாற்றுகின்றார்.

வானதூதர் கபிரியேலை மேரி மாதவிடம் அனுப்பி "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்று வாழ்த்துகிறார். (லூக்1:28). ஆகவே மேரிமாதாவின் அமலோற்பவத்தை கொண்டாடும் வேளையில் கடவுள் மேரிமரியாவுக்கு அளித்த மிகப்பெரிய பேற்றினை நாம் சிந்திப்போம்.

திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் கூறுவார் "மனிதர்கள் பாவம் என்ற உணர்வே இல்லாமல் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் இன்றைய காலத்தின் மிகப்பெரிய பாவம்." என்று கூறினார்.

மனிதர்கள் கடவுளுக்கும் பயப்படாமல், தங்களுடைய மனச்சாட்சிக்கும் பயப்படாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களுடைய மனச்சாட்சியை எங்கோ வைத்துவிட்டு வாழ்கிறார்கள். இந்த வேளையில் மேரிமாதாவின் மாசற்ற தூய்மையைத் துய்துணர்ந்து பார்ப்பது மிகவும் பொருத்தமாகும்.

மேரிமாதா தன்னை கடவுளுக்கு ஏற்ற தூய, நறுமணம் வீசும் பலிப்பொருளாக ஒப்புக் கொடுத்தார். "பரத்தைமை, அனைத்து ஒழுக்கக்கேடுகள், பேராசை ஆகியவற்றின் பெயர் கூட உங்களிடையே சொல்லப் படலாகாது. இதுவே இறைமக்களுக்கு ஏற்ற நடத்தை. அவ்வாறே, வெட்கங்கெட்ட செயல், மடத்தனமான பேச்சு, பகிடி பண்ணுதல் ஆகியவை தகாதவை. நன்றி சொல்லுதலே தகும்.

ஏனெனில் பரத்தைமையில் ஒழுக்கக்கேடாக நடப்போர், சிலை வழிபாடாகிய பேராசை கொண்டோர் போன்ற எவரும் கிறிஸ்துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப் பேறு அடையார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். வீண் வார்த்தைகளால் உங்களை யாரும் ஏமாற்ற விடாதீர்கள். ஏனெனில் மேற்கூறிய செயல்களால்தான் கீழ்ப்படியாத மக்கள் மீது கடவுளின் சினம் வருகின்றது.

எனவே அவர்களோடு நீங்கள் எதிலும் பங்குகொள்ள வேண்டாம்" என்ற தெய்வீகத் திருவார்த்தைக்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் எமது மேரிமாதா. "நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார் (எபே 1:4) அகவே நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் விளங்க வேண்டும்.

ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்.

எலிக்காய்ச்சல்!

# நடப்பாண்டில் 10,000 பேர் பாதிப்பு

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

**இந்த ஆண்டில் சுமார் 10,000 பேர் எலிக் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்நிலையில், ஆண்டு தோறும் எலிக்காய்ச்சலால் 120 முதல் 200 பேர் வரை உயிரிழப்பதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவ்வகை தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் உடலில் படும்போதும், பக்றீரியா கிருமிகள் கலந்த தண்ணீரைக் குடிப்பதாலும் எலிக்காய்ச்சலுக்கு ஆளாக நேரிடும் என சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

குளிர்க்காய்ச்சல், தலைவலி, உடல் வலி, உடல் தளர்வு, கண்கள் சிவந்துபோதல், கண் கூச்சம், வயிற்று வலி, வாந்தி, உடலில் தடிப்புகள் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாக காணப்படுகின்றன.

இவ்வாறான அறிகுறிகள் தொடர்ந்தால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லுமாறு சுகாதார அமைச்சு மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இரத்தினபுரி, காலி, களுத்துறை, குருநாகல், கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# செலவு அறிக்கை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் செலவிடப்பட்ட பணம் தொடர்பில் தெரிவிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எஸ்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலுக்குச் செலவிடப்பட்ட பணத்தின் தொகையை இது வரை வெளியிடாத வேட்பாளர்கள் தேர்தல் சட்டத்தை மீறுபவர்களாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த செலவு அறிக்கையை சமர்ப்பிக்க காலக்கெடு வழங்கப்பட்டிருந்தநிலையில், இனி மேலும் அது நீடிக்கப்படாது என தவிசாளர் மேலும் கூறியுள்ளார்.


இதேவேளை, பதிவு தபாலில் அல்லது அறிவித்தல் மூலமாக செலவு அறிக்கையை அனுப்பியவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 450 | 350-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 700 | 750-800 | 800 |
| தக்காளி | 350 | 350 | 300 | 450 | 460 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 100-150 | 160 |
| கோவா | 240 | 240 | 200 | 250 | 300 |
| கரட் | 160 | 260 | 200 | 200 | 320 |
| பூசணி | 140 | 150 | 150 | 120 | 200 |
| புடோல் | 260 | 300 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 50-70 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 340 | 230 | 350 | 380 | 400 |
| பாகற்காய் | 1500 | 2000 | 1000 | 650 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 200-300 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 200 | 130 | 200 |
| பயற்றங்காய் | 650 | 600 | 600 | 600-700 | 600 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 300 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 900 | 500 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 600 | 1000 | -- | 1600 |
| போஞ்சி | 550 | 550 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 160 | 150 | 200 | 150 | 200 |
| தேசிக்காய் | 600 | 450 | 400 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 160 | 150 | 80-150 | 160-200 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 650 | 1000 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 300 | 100 | 120 | 100 |
| ஈரப்பலா | 80 | 120 | 100 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா ஆட்சியைக் கவிழ்ப்பதே இலக்கு கிளர்ச்சியாளர்களின் தலைவர் சவால்!



(டமாஸ்கஸ்)

**சிரியா ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதே எங்களுடைய இலக்கு என ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சிக் கூட்டணியின் தலைவர் அபு முகமது அல்-ஜோலானி தெரிவித்துள்ளார்.**

சிரியாவில் தற்போது உள்நாட்டுப் போர் தீவிரமெடுத்துள்ள நிலையில், அலெப்போ நகரை கிளர்ச்சி படை கைப்பற்றியுள்ளது. இது அந்நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய நகரமாகும். தலைநகர் டமாஸ்கஸ் உள்ளிட்ட அனைத்து முக்கிய நகரங்கள், பெரும்பாலான மாகாணங்கள் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் நீண்டகாலமாக இருந்துவந்த நிலையில், அலெப்போ மாகாணத்தில் கிளர்ச்சிப் படையினர் கடந்த வாரம் திடீரென தாக்குதல் நடத்தி முன்னேறினர்.

ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் என்ற இஸ்லாமிய ஆயுதக் குழுவின் தலைமையிலான இந்த எதிர்பாராத தாக்குதலால் தற்போது சிரியா இராணுவம் நிலை குலைந்து பின்வாங்கியது. முன்னதாக, கடந்த 2016 இல் அலெப்போ நகரம் கிளர்ச்சிப் படைகள் வசம் இருந்தது. அப்போது, சிரியா அரசுக்கு ஆதரவாக உள்ள ரஷ்யா, அதிரடியாக வான் தாக்குதல் நடத்தி அந்த நகரத்தை மீட்டுக் கொடுத்தது. தற்போது அதே நகரத்தைக் கிளர்ச்சிப் படையினர் மீட்டுள்ளனர். இந்த நிலையில், நான்காவது நகரமான ஹமா நகரின் பாதுகாப்பு அரணும் தகர்க்கப்பட்டதால் அங்கிருந்தும் வெளியேறியதாக சிரியா இராணுவம் அறிவித்தது.

அதையடுத்து, அந்த நகரையும் கிளர்ச்சிப் படையினர் கைப்பற்றினர். இந்த நகரின் மத்திய சிறையில் இருந்த 3,000 இற்கும் மேற்பட்ட கைதிகளையும் கிளர்ச்சியாளர்கள் விடுதலை செய்தனர். இவர்கள் ஆளும் அரசுக்கு எதிராகப் புரட்சி செய்ததாகச் சொல்லி சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். தொடர்ந்து, அரசுப் படைகளின் வசம் உள்ள பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கில் கிளர்ச்சிப் படைகள் முன்னேறி வருகின்றன.

அந்த வகையில், அலெப்போவைத் தொடர்ந்து இத்லிப் நகரை குறிவைத்து கிளர்ச்சி படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அரசு படைகளின் வசமுள்ள டமாஸ்கஸ் நகரையும் குறிவைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும், நாட்டின் மூன்றாவது நகரமான ஹோம்ஸ் நகரையும் கிளர்ச்சியாளர்கள் குறிவைத்துள்ளனர்.

இது அரசு படைகளுக்கு பின்னடைவாகக் கருதப்படுகிறது. அதேநேரத்தில், சிரியா ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் அரசுக்கு ஆதரவாக ரஷ்யா, ஈரான் மற்றும் ஈரானின் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா மற்றும் பிற போராளிக் குழுக்கள் ஆதரவாகக் களமிறங்கியுள்ளன.

இந்த நிலையில், "ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதே எங்களுடைய இலக்கு" என ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சிக் கூட்டணியின் தலைவர் அபு முகமது அல்-ஜோலானி தெரிவித்துள்ளார். சிரியாவில் 40 ஆண்டுகளாக நீடித்த காயத்தை சுத்தம் செய்யவே தனது போராளிகள் ஹமாஸிற்குள் நுழைந்தனர்" என தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தொடங்கிய இந்த உள்நாட்டுப் போரின் காரணமாக இதுவரை 826 பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. மேலும், இந்தப் போரால் இதுவரை 2,80,000 பேர் இடம்பெயர்ந்திருப்பதாகவும் இந்த எண்ணிக்கை வரும் நாட்களில் 1.5 மில்லியனாக அதிகரிக்கக்கூடும் என அது எச்சரித்துள்ளது.

நவம்பர் 27 அன்று தொடங்கிய இந்த உள்நாட்டுப் போர், ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் என்ற இஸ்லாமிய ஆயுதக் குழுவின் தலைமையில் வழிநடத்தப்படுகிறது. இது அல்-கொய்தா அமைப்பின் சிரியா கிளையில் வேரூன்றி உள்ளது.

இஸ்ரேலுக்கும் லெபனான் குழுவான ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான போரில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த அதேநாளில், கிளர்ச்சியாளர்கள் வடக்கு சிரியாவில் தங்கள் தாக்குதலைத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# உக்ரைனை வீழ்த்த எதையும் செய்வோம்

## எச்சரிக்கும் ரஷ்யா



(மொஸ்கோ)

உக்ரைன் போரில் சமீபத்தில் ஹைப்பர்சோனிக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டது என்பது தோல்வியைத் தடுக்க "எந்த வழியையும்" பயன்படுத்த மொஸ்கோ தயாராக உள்ளது என்பதை மேற்கு நாடுகளுக்கு புரிய வைக்கவே என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பத்திரிக்கையாளர் டக்கர் கார்ல்சன் உடனான ஒளிபரப்பு நேர்காணலில் லாவ்ரோவ் இவ்வாறான கருத்துக்களை தெரிவித்தார்.

மேற்கு நாடுகள் "எந்த நாட்டிலும், எந்த பிராந்தியத்திலும், எந்த கண்டத்திலும் தங்கள் மேலாதிக்கத்தை உலகெங்கிலும் வைத்திருப்பதற்காக" போராடுகின்றன.

ரஷ்யா நிலைமையை அதிகரிக்க விரும்பவில்லை என்றும், வோஷிங்டன் மற்றும் அதன் பங்காளிகளுடன் "எந்தவொரு தவறான புரிதலையும் தவிர்க்க" விரும்புகிறது என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-8)

# மன்னிப்பு கோரினார் தென் கொரிய ஜனாதிபதி

(சியோல்)

"தென்கொரியாவில் இராணுவ ஆட்சியை மீண்டும் அமுல் படுத்தமாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் தெரிவித்தார்.

கிழக்காசிய நாடான தென் கொரியாவில், அடுத்தாண்டு தாக்கல் செய்யப்பட உள்ள நிதிநிலை அறிக்கை மசோதா குறித்து ஆளும் மக்கள் சக்தி கட்சிக்கும், பிரதான எதிர்க் கட்சியான ஜனநாயக கட்சிக்கும் தொடர் மோதல் போக்கு நிலவியது. இதை அடுத்து "தேச விரோத சக்திகளை ஒழிக்க, அவசரநிலை இராணுவ சட்டம் பிரகடனப்படுத்தப்படுகிறது என ஜனாதிபதி யூன் சுக் இயோல் அறிவித்தார்.

இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. மக்கள் போராட்டத்தில் ஈடுபட தொடங்கினர். தென்கொரியா பாராளுமன்றில் நடந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் இராணுவ ஆட்சி பிரகடனத்திற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். இராணுவ ஆட்சியை திரும்பப் பெறுவதற்கான தீர்மானம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.



இதையடுத்து, இராணுவ ஆட்சியை அமுல் செய்யும் பிரகடனத்தை திரும்ப பெறுவதாக ஜனாதிபதி யூன் சுக் இயோல் அறிவித்தார். இதனால் அந்த நாட்டில் 12 மணி நேரம் நிலவிய பெரும் குழப்பம் முடிவுக்கு வந்தது. இந்நிலையில், தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் தொலைக்காட்சி வழியே நாட்டு மக்களிடையே பேசியதாவது,

மக்களை கவலை அடையசெய்துள்ளேன். பெரும் சிரமத்தை ஏற்படுத்தியதற்கு வருத்தம் தெரிவித்து கொள்கிறேன். இராணுவ ஆட்சி அமுல்படுத்தியதற்கு என்னை மன்னித்து விடுங்கள். இராணுவ ஆட்சியை மீண்டும் அமுல்படுத்த மாட்டேன். எனது அரசியல் எதிர்காலத்தை கட்சி தீர்மானிக்கும். எனது செயலுக்காக, எந்தவொரு விளைவுகளையும் எதிர்கொள்ள தயாராக உள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் குணங்களின் அனுபவத்தை அதிகப் படுத்தும் எண்ணங்களை செயலில் கொண்டு வாருங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுவோம்

கன்று ஈன்ற பசுமாட்டுக்குப் பத்தியம் பார்த்த வர்கள் நம் தமிழர்கள்.

ஆம், கன்று ஈன்ற பசுவுக்கு நெற் பச்சை அரசியில் கஞ்சி காய்ச்சி மூன்று நாட்களுக்கு கொடுக்கப்படும்.

இதற்காக ஏலவே நெல்லை அரிசியாக்கிப் பத்திரப்படுத்தி வைத்திருப்பார்கள்.

இதேபோல வீதியால் போகின்ற பசுக்கள் தாகம் தீர்ப்பதற்காக வீட்டுக்கு வெளியில் தொட்டி கட்டி கிணற்றில் இருந்து துலாவின் உதவியுடன் தண்ணீர் இறைத்துத் தொட்டி நிரப்பப்படும்.

இவ்வாறு நீர் நிரப்பப்பட்ட தொட்டிக்கருகில் நீளக் கல்லு வைக்கப்படும். தண்ணீர் அருந் திய பசுக்கள் தங்கள் உடலை உரஞ்சுவதற் காகவே அந்தக் கல் நிறுத்தப்பட்டிருக்கும்.

அவ்வாறு பசுக்கள் தங்கள் தேகத்தை உரஞ்சுவதற்காக வைக்கப்பட்ட கல் என்ப தால், அதற்கு ஆவுரஞ்சிக்கல் எனப் பெயர் வரலாயிற்று.

இதுபோல வாகன வசதி இல்லாத அந்தக் காலத்தில் பொருட்களை தலையில் சுமந்து கொண்டு நடந்து செல்வார்கள். இவ்வாறு செல்பவர்கள் பாரத்தை இறக்கி வைத்து களைப்பாறுவர்.

பாரத்தை நிலத்தில் வைத்தால், மீண்டும் அதைத் தூக்கித் தலையில் வைப்பது முடி யாத காரியம் என்பதால், தெருவோரங்களில் சுமை தாங்கிகளை அமைத்தனர்.

இதற்கும் அப்பால், எங்கள் தமிழர் பண் பாட்டில் மிகுந்திருந்த திண்ணைப் பண்பாடும் தெரு மூடி மடங்களும் வீதியால் செல்பவர்கள் தாகம் தீர்த்து தங்கியிருந்து களைப்பாறு வதற்கான ஏற்பாடுகள்.

ஆனால் இன்று கன்றுத்தாச்சி மாட்டை இறைச்சிக்காக வெட்டுவதுவே செய்தியாக உள்ளது.

இங்குதான் எங்களின் மனங்கள் வக்கிர மடைந்துபோன உண்மை உணரப்படுகிறது.

ஆம், நாடும் நகரமும் மக்களின் வாழ்வும் முன்னேற்றம் அடையும்போது, விரயமா கின்ற பொருட்களும் அவற்றைப் பொதி செய்த எச்சங்களும் கணக்கின்றிக் குவி யவே செய்யும்.

இதனால் கழிவகற்றல் முகாமைத்துவம் தேவையாகிறது. இருந்தும் கழிவகற்றும் பணிகளில் ஈடுபடுகின்றவர்களால் மட்டும் அதனைச் சிறப்பாகச் செய்துவிட முடியாது.

மாறாக, ஒவ்வொரு குடும்பத்தவர்களும் தத்தம் வீடுகளில் சேர்கின்ற குப்பை கூழங் களை ஒழுங்கான முறையில் முகாமை செய் வார்களாயின், சுத்திகரிப்புத் தொழிலாளர் களின் வேலைப்பளு கணிசமாகக் குறைந்து போகும்.

எனினும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை நம்மில் பலர் ஒரு பொருட்டாக நினைப்பதில்லை.

இவ்வாறானவர்கள் தங்கள் வீட்டுக் குப்பை கூழங்களை வீதிகளில் கொட்டிவிட, அவற் றைத் தெருநாய்கள் பிய்த்துப் பிடுங்க; சுத்தி கரிப்புத் தொழிலாளர்கள் அவற்றை அகற்று வதில் கடும் அசௌகரியங்களை எதிர்கொள் கின்றனர்.

எனவே பொதுமக்களாகிய நாம் மனிதாபி மானத்துடன் நடந்து, எங்கள் வீட்டுக்கழிவு களை மிக உச்சமாக முகாமை செய்து எங்கள் பிரதேசத்தின் தூய்மையைப் பேணுகின்ற பொறுப்பைச் செய்தாக வேண்டும்.

இதைச் செய்பவர்களைத்தான் நன்மக்கள் என்று நம் தமிழ் போற்றுகிறது.

# அரச மருத்துவமனைகளால் தரமற்ற மருந்துகள் வழங்கப்படவில்லை

## சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

தரமற்ற மருந்துகள் அரசாங்க மருத்துவ மனைக் கட்டமைப்பால் வழங்கப்படவில்லை என சுகாதாரம் மற்றும் வெகு ஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரி வித்தார்.

தரமற்ற மருந்துகள் தொடர்பில் வெளியான செய்திகள் குறித்து எதிர்க் கட்சியின் பிரதான இணைப் பாளர் கயந்த கருணா திலக்க எழுப்பிய கேள்விக் குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில்,

"தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப் பட்ட மருந்துகள் தான் தேசிய ஔடதங்கள் ஒழுங் குபடுத்தல் அதிகார சபை ஊடாக விநியோகிக்கப்படு கின்றன.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் வினைத்திற னற்ற நிலை காணப்படு கின்றது. தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுகள் தற் போது விரைவுபடுத்தப் பட்டு வருகின்றன.

ஆனால், நீங்கள் கூறும் விதமாக தரமற்ற மருந்துகள் அரசாங்க மருத்துவமனைக் கட்ட மைப்பின் ஊடாக விநி யோகிக்கப்படவில்லை. மருந்துத் தரத்தின் தன்மை தொடர்பில் பிரச்சினை இருப்பின் அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

இது தொடர்பாக எதிர் காலத்தில் விரிவாக ஆராய் ந்து அறிக்கை சமர்ப்பிக்கப் படும்" என்றார். (ம-7)

# எனது கல்வித் தகைமை குறித்து பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை

## சபாநாயகர் அசோக ரன்வல

(கொழும்பு)

தனது கல்வித் தகைமை குறித்த குற்றச்சாட்டுக்க ளுக்கு பதிலளிக்க வேண் டிய அவசியமில்லை என சபாநாயகர் அசோக ரன் வல தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் பட்டம் தொடர்பில் சமூக ஊடகங் களில் பல்வேறு கருத்துக் கள் பகிரப்பட்டு வருகின்ற நிலையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள் ளார்.

இதேவேளை மொரட் டுவ பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டத்தையும், ஜப்பானில் கலாநிதி பட்டத் தையும் பெற்றுக்கொண்டுள் ளதாக சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.

எனக்கும் கட்சிக்கும் அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு பிரசா ரம் செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக் களுக்கு தற்பொழுது பதில ளிக்க வேண்டிய அவசிய மில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# கட்டுமர படகொன்று கவிழ்ந்து விபத்து

## மாணவன் உயிரிழப்பு

(கதிர்காமம்)

செல்லக்கதிர்காமப் பகு தியில் அக்கரவிஸ்ஸ வாவியில் 5 மாணவர்கள் பயணித்த கட்டுமர பட கொன்று கவிழ்ந்த விபத் தில் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

உயிரிழந்தவர் செல் லக் கதிர்காமம் பிரதே சத்தை சேர்ந்த 19 வயது டைய மாணவராவார்.

இந்த விபத்து நேற்று மாலை இடம் பெற்றுள் ளது.

உயர்தரத்தில் கல்வி பயிலும் 5 மாணவர்கள் இந்தப் படகில் பயணித்த நிலையில், படகு கவிழ்ந் ததைத் தொடர்ந்து கிராம மக்கள் உடனடியாக விரை ந்து அவர்களைக் காப்பாற் றியுள்ளனர்.

இதேவேளை உயிரி ழந்த மாணவனின் சடலம் கதிர்காமம் மாவட்ட வைத் தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. (ம-7)

# 500 கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

ஜா-எல, ஏக்கல, க்ரூஸ் வத்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 500 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைப் பொலிஸார் கண்டுபிடித் துள்ளனர்.

அத்துடன் அந்த வீட் டின் உரிமையாளரான 38 வயதுடைய நபரை பொலி ஸார் கைது செய்துள்ள னர்.

சந்தேகநபரின் வீட்டின் படுக்கையறை ஒன்றில் இந்தப் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந் ததாகப் பொலிஸார் தெரி வித்தனர்.

சந்தேகநபர் இதற்கு முன்னர் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சிறைச் சாலையில் இருந்து பிணை யில் விடுவிக்கப்பட்டவர் எனப் பொலிஸார் தெரிவித் தனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோ யின் போதைப்பொருளின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சந்தேகநபரைத் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற் கொள்ளவுள்ளதாக பொலி ஸார் குறிப்பிட்டனர். (ம-7)

# BEE FORT சர்வதேசப் பாடசாலையின் வருடாந்த கலைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

BEE FORT சர்வதேசப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்ட பத்தில் இடம்பெறும்.

BEE FORT சர்வதேசப் பாடசாலையின் நிர்வாக இயக்குநர் எம்.பகீரதன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் கடற் றொழில் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் பிரதம விருந்தினராகவும் வலம் புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், BELAC பணிப்பாளர் எம்.சந்துரு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வும்கலந்து கொள்வர்.(ம-7)

# முன்னாள் இராணுவச் சிப்பாய் ஹெரோயினுடன் கைது

(பண்டாரவளை)

பண்டாரவளை நகரில் வட்ஸ்அப் ஊடாக ஹெரோ யின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட அங்கவீனமுற்ற முன் னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான 320 ஹெரோயின் போதைப் பொருள் பக்கட்களுடன் அவர் கைது செய்யப்பட்ட தாகப் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

பண்டாரவளை பெரேரா மாவத்தையில் தற்காலிக வாடகை வீட்டில் தங்கியுள்ள வெலிமடை அம்பகஸ்தோவ பிரதேசத் தில் வசிக்கும் 40 வயது டைய அங்கவீனமுற்ற முன்னாள் இராணுவச் சிப் பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் உள்ள பிரதான போதைப்பொருள் வியாபாரி ஒருவர் இந்தப் போதைப்பொருள் வர்த் தகத்தை முன்னெடுத்துச் செல்வதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ம-7)

# உந்துருளி விபத்து இருவர் உயிரிழப்பு

தொடங்கொடப் பகுதி யில் மரமொன்றுடன் மோதி உந்துருளி ஒன்று விபத் துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

கெட்டகஹாஹேனவில் இருந்து நேஹின்ன நோக் கிப் பயணித்த உந்துருளி ஒன்று வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் உந்துருளி யில் பயணித்த இருவர் பல த்த காயமடைந்த நிலை யில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்ததாகத் தெரிய வந்துள்ளது.

37 மற்றும் 42 வய துடையவர்களே இவ்வாறு உயிரிழந்ததாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்கள் அழிவடைய

## தொண்டைமானாறு பாலம் காரணமல்ல

## தெளிவுபடுத்திய அதிகாரிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தின் வரணி-நாவற்காடு கிராமத்தில் உள்ள நாற்பதாயிரம் ஏக்கர் பயிர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடையத் தொண்டைமானாறு தடுப்பணை காரணம் இல்லை என்பதனை அதிகாரிகள் விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நாவற்காடு நெற்செய்கையாளர்கள் ஒன்று கூடி தமது நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவடைய தொண்டைமானாறு தடுப்பணை திறக்கப்படாமை தான் காரணம் என வயலில் இறங்கிப் போராடியிருந்தனர்.

இதனை அறிந்த தென்மராட்சிப் பிரதேச செயலக மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் உடனடியாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்து தொண்டைமானாறு தடுப்பணை வான் கதவுகள் கடந்த 18ஆம் திகதியில் இருந்து திறந்து விடப்பட்டிருப்பதாகத் தெரிவித்ததுடன் வரணியில் இருந்து தொண்டைமானாறிற்கு வெள்ளம் கடத்தப்படாமைக்கான காரணத்தையும் நெற்செய்கையாளர்களையும் அழைத்துச் சென்று ஆராய்ந்திருந்தனர்.

இதன்போது யாக்கரைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தின் ஊடாக நீர் தொண்டைமானாறிற்கு கடத்தப்படுவது மிகக் குறைவாக இருந்தமை மற்றும் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட மண்டான் பகுதியில் பாரிய பாலம் அமைக்காமல் புதிதாக அமைக்கப்பட்ட வீதியமே வெள்ள நீர் கடத்தப்படாமைக்கு காரணம் எனக் கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக நாவற்காடு கிராம நெற்செய்கையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்

எமது கிராமத்தில் இருந்து நீர் கடத்தப்படாமையால் தொண்டைமானாறு பால கதவுகள் திறக்கப்படவில்லை என தவறாக எண்ணி விட்டோம். ஆனால் வரணிக்கும் தொண்டைமானாறு தடுப்பணைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள தடங்கலே மேலதிக வெள்ள நீர் கடத்தப்படாமல் வயலில் தேங்கக் காரணம்.

எமது கவனயீர்ப்புப் போராட்டத்தை அறிந்து உடனடியாக விரைந்து செயற்பட்டு உண்மை நிலைமையை வெளிப்படுத்திய அதிகாரிகளுக்கு வரணி விவசாயிகள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் தற்போது வெள்ளம் கடத்தப்படாமைக்கு காரணமாக உள்ள வீதி மற்றும் பாலத்திற்கு பொறுப்பான திணைக்களங்கள் விரைந்து செயற்பட்டு வெள்ளத்தை கடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் வெள்ளம் வந்து தேங்கிய பின்னர் தடைகளை தேடி அலைவதை விடுத்து மழைக்கு முன்னரே வாய்க்கால்கள் மற்றும் பாலங்களைச் சரி செய்யும் பணிகளை விவசாயிகளும் உரிய திணைக்களங்களும் முன்னெடுத்தால் இவ்வாறான பிரச்சினைகளை ஓரளவிற்கு தவிர்க்க முடியும் என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (நி-8-30)

## முள்ளிவாய்க்கால் பகுதியில்

# கடும் மழையின் பின்

## வெளியே தெரிந்த வெடிபொருட்கள்



(முல்லைத்தீவு)

அண்மையில் பெய்த மழை வெள்ளப்பெருக்கினால் நிலத்தில் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் சில முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் வெளியில் தென்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இந்த வெடிபொருட்கள் காணப்பட்டுள்ளமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த பகுதியினை அடையாளப்படுத்தியுள்ளார்கள்.

இது விடுதலைப்புலிகள் காலத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக நில அரிப்பு ஏற்பட்டு இந்த வெடிபொருள் எச்சங்கள் தென்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (நி-8-299)

## ‘அஸ்வெசும’ தொடர்பில்

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளன.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் தொடர்பாக இதுவரை விண்ணப்பிக்காதவர்கள், முதலாம் கட்டத்தில் விண்ணப்பித்தும் வீடுகளிற்கு அலுவலர்கள் வருகை தந்து அவர்களால் தரவுகள் சேகரிக்கப்படாத நபர்கள் மற்றும் தகவல் சேகரிக்கப்பட்டும், நலன்புரி நன்மைகள் சபையின் தரவுத்தளத்தில் தகவல்கள் பதிவேற்றப்படாத நபர்கள்,

முதலாம் கட்டத்தில் அல்லது இரண்டாம் கட்டத்தில் ஆரம்ப விண்ணப்பம் கோரலின் போது நபர் ஒருவர் தாம் வசித்த கிராம அலுவலர் பிரிவு அல்லது பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து மாற்றலாகி தற்போது வேறு கிராம அலுவலக பிரிவு அல்லது பிரதேச செயலாளர் வசிக்கும் சந்தர்ப்பத்தில் அவர் தற்போது வசிக்கும் தனது புதிய கிராம அலுவலர் பிரிவு அல்லது பிரதேச செயலாளர் பிரிவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

எனவே தமது விண்ணப்பங்களை தாம் தொடர்ச்சியாக வசிக்கும் நிரந்தர கிராம அலுவலர் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் டிசம்பர் 9 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் சமர்ப்பிக்கமுடியும்.

அத்துடன் நலன்புரி நன்மைகள் திட்டத்தின் முதலாம் கட்டத்தில் கொடுப்பனவுக்காக தெரிவுசெய்யப்படாமை தொடர்பாக தங்களது மனக்குறைகளை கிராம அலுவலர் அலுவலகம் அல்லது பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று டிசம்பர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கிராம அலுவலர் அலுவலகம் அல்லது பிரதேச செயலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்களது மனக்குறைகளை தெரிவித்துக் கொள்ள முடியும் எனவும் இத் திட்டம் தொடர்பான மேலதிக விளக்கங்களைத் தமது பிரதேச செயலக நலன்புரி நன்மைகள் சபை அலகினை தொடர்பு கொள்வதன் மூலம் மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: BSc, Associate Manager<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14973 | பிறப்பு-1974- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 40 7 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: தொழில் புரியும் மணமகன்<br>தொ.இ: G/14694 |
| பிறப்பு:1979 - இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 110<br>உயரம்:5' 10"<br>தகைமை/தொழில்:BCA, MCA, DO<br>எதிர்பார்ப்பு:Degree<br>தொ.இ: B/14974 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2 இல் செவ்<br>உயரம்: 4' 11"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:தகுந்தவரன்<br>தொ.இ: G/14695 |
| பிறப்பு:1993 - இந்து<br>நட்சத்திரம்: சதயம் 9 இல் சூரி செவ்<br>கி.பா: 6 1/2<br>உயரம் :5' 9"<br>தகைமை/தொழில்:கடைச்சல் இயந்திரம் owner<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்.<br>தொ.இ: B/14976 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்:5' 5"<br>கி.பா: 83 2 இல் செவ்<br>தகைமை/தொழில்:A/L, Pharmacist(Following)-Canada,<br>எதிர்பார்ப்பு:கனடாவில் உள்ள மணமகன்<br>தொ.இ: G/14697 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு காரணமாக எதிர்வரும் நாட்களில் நாட்டின் வானிலையில் தாக்கம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக டிசம்பர் 10ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## யாழின்...

கொழும்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது பெருமளவு நகைகள், ஆவணங்கள், திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கைக்குண்டு என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் பகுதி பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரண்டு வருடங்களாக துவிச்சக்கரவண்டியில் முகத்தை மறைத்துச் சென்று நூதனமாக நகைகளைத் திருடும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் நீண்ட காலமாக தேடப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் கொழும்பில் தலைமறைவாக இருந்தபோது யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதன்போது சந்தேக நபரின் மனைவி அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 90 பவுண் நகைகள் மீட்கப்பட்டதுடன், திருடிய நகைகளை விற்ற பணத்தில் சந்தேக நபர் கொழும்பில் சொகுசு வீடொன்றை அமைத்தமையும் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட நகைகளை வாங்கிய கொழும்பைச் சேர்ந்த மூன்று பேரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பிரதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## விபரீத...

மேற்படி இளைஞன் கடந்த வியாழக்கிழமை இரவு கொடிகாமத்தில் இடம்பெற்ற உறவினர் ஒருவருடைய பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் வீடு வந்து தூக்கிட்டு உயிரை மாய்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞனுடைய சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## அல்வாய்...

ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்தபோது திடீரென சுகவீனமுற்ற நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7)

## எந்தவொரு...

த்த வருடம் முதல் வாகனங்கள் இறக்குமதி செய்வது தொடர்பில், அவர்களது பேஸ்புக் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தி வருகின்றனர்.

இதன்காரணமாக வாகன இறக்குமதி, பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்நிலையில், வாகன இறக்குமதிக்கான உரிய தினத்தை அரசாங்கம் இதுவரையிலும் அறிவிக்கவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார். (ம-7)

## மாற்றத்தை...

துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மருத்துவ பீடத்தில் நேற்று முன்தினம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற டிஜிட்டல் நூலக மாநாடு 2024 இல் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் கூறியதாவது,

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக முதலீடு செய்வதை நாங்கள் மிகவும் முக்கியமானதாக கருதுகிறோம். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்வது அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இன்றியமையாதது என்று நாங்கள் நம்புகிறோம். கடந்த 75 வருடங்களில் நாடு பயணித்த அதே திசையில் அல்லாமல், நாட்டை புதிய பாதையில் இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இது ஆராய்ச்சி, சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்றார். (ம-7)

## உள்ளூராட்சித்...

பட்டதாக அதன் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை கோருவதற்கான வரைவுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அண்மையில் அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரிசி...

இது தொடர்பில் அடுத்த பத்து நாட்களுக்குள் அவதானமாகச் செயற்படுமாறும், இதற்கு முரணாக செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக அமுல் படுத்துமாறும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம-7)

## இந்...

தங்கச்சிமடத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழகம் இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்த வருடத்தில் இது வரை 529 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பண்டிகைக் காலத்தில் முட்டை, கோழியிறைச்சி விலைகள் அதிகரிக்காது

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை மற்றும் கோழி இறைச்சியைத் தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்க முடியும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

எதிர்வரும் ஜனவரி மாதம் வரை முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையில் மாற்றம் இருக்காது. பண்டிகைக் காலங்களில் கோழி இறைச்சியின் விலையை 1000 ரூபாவிற்கும் குறைவாகவே பேண முடியும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.12.07 — சீட்டிழுப்பு இலக்கம் 5678 — E 4 2 8 5 1 1
அத சம்பத — E 8 5 1 1 — சீட்டிழுப்பு இலக்கம் 253
National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.12.07 — சீட்டிழுப்பு இலக்கம் - 1708 — N 06 27 33 54 N — Double Chance 75727

மெகா பவர் — திகதி 07/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2026 — X 10 04 24 40 42 — 121749

லக்கி 7 VIP — திகதி 2024.12.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0504 — J 9 0 9 3 5 8 J

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3920 — சீட்டிழுப்பு திகதி 07.12.2024 — T 11 16 32 73 — T 172483

ஹதஹன HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2024.12.07 — சீட்டிழுப்பு இலக்கம் 987 — மீனம் 02 23 26 31 மீனம் — 089154 — 19

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பம்பர் — 07.12.2024 — வெற்றி வாரம் 386 — U 8 1 3 4 1 1 — 20654 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,826,880.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2652 — சீட்டிழுப்பு திகதி 2024.12.07 — தினம் சனிக்கிழமை — 08 26 28 42 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,569,716.00

சனிதா — திகதி 07.12.2024 — வெற்றி வாரம் 4813 — 14 37 48 55 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,601,330.00 — 95779

சசிரி — வெற்றி வாரம் 573 — சீட்டிழுப்பு திகதி 07.12.2024 — சனிக்கிழமை — 08 40 41 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4364 — சீட்டிழுப்பு திகதி 07.12.2024 — தினம் சனிக்கிழமை — 13 29 45 48 மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,219,630.80 — 117845

கப்ருக — T 25 03 55 66 69 — 1828 — 07.12.2024 — சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,513,265.20

அட கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2478 — சீட்டிழுப்பு திகதி 2024.12.07 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,361,908.80 — 18 19 20 31 H — 999073
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 01 5Kg Prima மா/பை | - 920/= | ~~1150/=~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg றவை | - 290/= | |
| 1Kg பயறு | - 570/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 688/= | |
| 1Kg மல்லி | - 380/= | |
| 01 10Kg விஜிதா அரிசி | - 2810/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 780/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 285/= | |
| 500g சமபோஷா | - 379/= | ~~420/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | ~~240/=~~ |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 990/= | ~~1050/=~~ |

1Kg சன்லைட் பவுடர் 320/= ~~360/=~~



Max 01 400g Anchor 987/= ~~1050/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (612)

Happy Supermarket 0777 8080 30

## விவசாயம் சார் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு

முற்று முழுதாக கனதியான (Havy dutty) இயந்திரங்களான கச்சான் உடைக்கும் இயந்திரம், கச்சான் செடியிலிருந்து பிடுங்கும் இயந்திரம், பழச்சாறு பதனிடும் இயந்திரம், பனம் பழம் பிழியும் இயந்திரம், பழங்கள் (எல்லா வகையான) பிழியும் இயந்திரம், Bio Gas Plant என்பனவும் விற்பனைக்குண்டு. (2662)

தொடர்புகளுக்கு : 076 238 8013

## வேலைவாய்ப்பு

No198 கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS (PVT) LTD AIR TICKETING அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் ( Sabre System தெரிந்தவர்கள் ) விரும்பத்தக்கது.அல்லது அனுபவமற்றவர்களுக்கு (Training) கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 021 222 8555, 077 108 3482

## MTC

GROUP AND PERSONAL CLASSES

தரம் 06 - 11

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 6 புதிய மாணவர்களுக்கான வகுப்பு

ஆரம்பம் : 15.12.2024 (ஞாயிறு)

நேரம் : பிற்பகல் 1.00 - 3.00

பதிவுகளை மேற்கொள்ளவும்

பழனியாண்டவர் கோவிலடி, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. (2681)

074 1301637
074 3602238

## வேலைக்கு ஆட்கள் தேவை

SVIS Pharmacy
1. Clinic Waiter/ Nurse 2. Assistant Accountant
SVIS Distributors (pvt) ltd
1. Store Keeper 2. Driver
( ஆண், பெண் இருபாலாரும் ) (600)

077 211 0996, 077 245 4224
Send CV email : svisdistributors@gmail.com
புத்தூர் சந்தி, மீசாலை.

## வேலைவாய்ப்பு

சுப்பர் மாக்கட் ஒன்றிற்கு வாகன டிரைவர் (Driver) தேவை. Driving தவிர கூலி வேலைகளும் பார்க்கக் கூடியவர் விரும்பத்தக்கது. வயதெல்லை : 30 - 50

ஹப்பி சுப்பர் மாக்கட் - உரும்பிராய் (2721)

077 789 7295

நத்தார். புதுவருடத்தை முன்னிட்டு

## லைடன் புடவை நிலையம் யாழ்ப்பாணம்



எதிர்வரும் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள் (C-1741)

10%
1.12.2024 - 31.12.2024

22.12.2024, 29.12.2024 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமையும் கடை திறக்கப்படும்.

Leyden Textile Center
410, Hospital Road, Jaffna.
021 222 2381

## V2 VISA SERVICES

கனடா Visit Visas Air Tickets
077 77 20 322
077 77 19 322
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1743)

## விற்பனைக்குண்டு

ஒரு மாத கினி கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு. மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு முன்பாக ஒரு சோடி : 2500/= (2709)

076 634 8343

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2712)

077 814 7389, 077 986 5457

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு "O" குருதி வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவை.

வயதெல்லை : 42 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்.

HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும். (2701)

077 540 6732 Call/ Whatsapp
077 723 8937 Call

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.